# பிரேத மனிதன்

நாவல்

மேரி ஷெல்லி எழுதியது

மொழிபெயர்ப்பு

" புதுமைப்பித்தன் "

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI 625021.

மீனாட்சி புத்தக நிலையம்

60, மேலக் கோபுரத் தெரு,

மதுரை-625 001

கிளை : 403, திருவல்லிக்கேணி நெடுஞ் சாலை, சென்னை-5

முதற் பதிப்பு : டிசம்பர் 1943
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 1977
மீருட்சி - 130
உரிமை பதிவு

விலை ரூ. 2-00

138565

MEENAKSHI PUTHAKA NILAYAM
60. West Tower Street, MADURAI-625 001

Branch : 403, Triplicane High Road, MADRAS-5

அச்சிட்டோர் : கல்விப்பிரகாசம் பிரஸ், சென்னை-5

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-625021.

# பொருளடக்கம்

முன்னுரை

ஆரம்பம்

அன்னியன் சொன்ன கதை

முயற்சி

பிரேத மனிதன்

பழியும் பாவமும்

சந்திப்பு

பிரேத மனிதன் பட்ட துன்பம்

'நான் படித்த கதை'

பிரதிக்ஞை

மீண்டும் பிரம்மா உத்தியோகம்

கலியாண தினத்தன்று இரவு

முடிவு

# இதில் வருவோர்

அல்பான்ஸ் பிராங்கன்ஸ்டீன் — ஜெனிவா பிரபலஸ்தர். விக்டரின் தந்தை.

விக்டர் பிராங்கன்ஸ்டீன் -- இரண்டாவது பிரம்மா.

கிளேர்வெல் — இரண்டாவது பிரம்மாவின் பள்ளிக்கூட நண்பன்.

வில்லியம், எர்னஸ்ட் — சகோதரர்கள்.

எலிஸபெத் லாவென்ஸா — விக்டருக்கு நிச்சயம் செய்த காதலி.

டிலேஸி — குருட்டுக் கிழவன்.

பெலிக்ஸ், அகேதா — அவனுடைய மக்கள்.

ஸாதீ — அரபுக் காதலி.

கார்வின் — ஐரிஷ் மாஜிஸ்டிரேட்.

கிரம்ப், வால்ட்மென் — இங்கோல்ஸ்டாட் சர்வகலா சாலைப் பண்டிதர்கள்.

# முன்னுரை

இதென்ன, பிரேதத்தைக் கூட்டித் தைத்து உயிர் தருவதாவது என்று பலர் நினைக்கலாம். மனிதனுடைய மூல வம்சம் பற்றியும் ஜீவ பரிணும நியதியைப் பற்றியும் ஆராய்ச்சி நடத்திய சார்ள்ஸ் டார்வின் ஹக்ஸ்லி முதலிய பண்டிதர்கள், வருங் காலத்தில் சாத்தியம் என நினைத்த ஒரு கருத்தை, அதாவது சிருஷ்டி ரகசியம் நம் வசம் கிடைத்துவிடும் என்பதை ஒட்டியே இந்தக் கதை ஜோடிக்கப்பட்டிருக்கிறது. இங்கிலீஷ் பாஷையிலே இந்தக் கருத்தையொட்டி பல நாவல்கள் வெளி வந்துள்ளன: எச். ஜீ. வெல்ஸ் எழுதிய ஐலண்ட் ஆப் டெரர் (பீதித் தீவு) என்ற நாவலிலும் ஒரு பண்டிதர் மிருகங்களை ரண சிகிச்சை மூலம் மனிதனுக்க முயலுவதாகக் கதை ஒன்று உண்டு.

இங்கிலீஷ் பாஷையிலே, நன்மை தீமை என்ற இரண்டு சக்திகளை மோதவிட்டு அதன் விளைவுகளைப் பார்க்கும் கதைகள் பல உண்டு டாக்டஸ் பாஸ்டர், டாக்டர் ஜெக்கில் அண்ட் மிஸ்டர் ஹைட், ஐலண்ட் ஆப் டெரர், இன்விஸிபிள் மான், (சூட்சும சரீரி) முதலிய நாவல்களைப் போலத்தான் பிராங்கன்ஸ்டீன் என்ற இந்தப் பிரேத மனிதனும். பிராங்கன்ஸ்டீன் சிருஷ்டித்த பிரேத மனிதன் அவனைக் கேட்கும் கள்விகள், மனிதன் தெய்வத்தைப் பார்த்துப் போடும் கேள்விகளாகவே கொள்ள வேண்டும்.

இதை எழுதினவர் **மேரி ஷெல்லி**. இல்கிலீஷ் பாஷையில் பிரபல கவியான ஷெல்லியின் மனைவி. பிறந்தது 1797. ஷெல்லி இவளை இரண்டாவது தாரமாக கலியாணம் செய்து கொண்டார். கலியாணமாகு முன்பே இவள் பல கதைகள் எழுதினதுண்டு. இவளது தந்தையும் பிரபலஸ்தர். அவர் பெயர் கூட்வின். அந்தக் காலத்திலே இலக்கிய மறுமலர்ச்சிக்கு துணை செய்த கூட்வின் சர்க்கிள் என்ற இலக்கிய சங்கம் ஒன்று உண்டு. மேரி ஷெல்லியின் கற்பனை பூர்ண வடிவம் பெற்றது கலியாணத்துக்குப் பிறகுதானும்.

இந்தப் பயங்கரமானதொரு கற்பனை ஒரு பெண்ணுகு எப்படித் தோன்றியது ?

மேரி ஷெல்லியே இதை விவரிக்கிருர்.

" 1812 வேனிலில் நாங்கள் ஸ்விட்ஸர்லாந்தில் குடியேறினேம். எங்கள் அருகே லார்ட் பைரன் குடியிருந்தார். (லார்ட் பைரன் ஆங்கில கவி.) அவர் அப்போது சைல்ட் ஹெரால்ட் என்ற காவியத்தை எழுதி வந்தார். ஜெனிவாவில் அப்போது மழையும் தூரலுமாக இருந்து கொண்டிருந்தது. பிரெஞ்சு பாஷையில் மொழி பெயர்க்கப்பட்ட ஜெர்மன் பேய்க் கதை ஒன்றைப் படித்துப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தோம். இதைப் படிக்கும்போது நாங்கள் அதே மாதிரி பேய்க் கதை ஆளுக்கொன்று எழுதுவது என்று தீர்மானித்தோம். ஷெல்லி எழுதியது, மாஜெப்பா என்ற காவியத்தின் கடைசியில் பதிப்பிக்கப்பட்டது. என் பங்குக்கு, நானே தினம் தினம் கதை எதுவும் தோன்றவில்லை என்று சொல்லி வந்தேன். அவர் எழுதியதைப் போலவே பயங்கரமான சிருஷ்டி ஒன்ருக இருக்க வேண்டும் என்று விரும்பினேன்.

பைரனும் ஷெல்லியும் பேசிக் கொண்டிருக்கும்போதெல்லாம் அருகில் உட்கார்ந்து நான் கேட்டுக் கொண்டிருப்பேன். அவர்கள் இருவரும் டாக்டர் டார்வின் பரிசோதனைகளைப்

பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். அந்த டாக்டர் ஸேமியாவை ஒரு கண்ணாடிப் பெட்டியில் போட்டு அடைத்து ஏதோ ஒரு முறையால் அது உயிர்பெற்று புழுவாக நெளியும் வரை வைத்திருந்தார் என்று சொல்லிக் கொள்ளுவார்கள். நான் இதை வைத்துக்கொண்டுதான் பிரேதத்துக்கு உயிர் கொடுக்க முடியும் என்று கற்பனை செய்தேன்!

அன்று தூங்க முயன்றபொழுது என்னால் தூங்க முடியவில்லை. பேய்க் கனவுகள் பல அல்லல்படுத்தியது. யாரோ ஒருவர் ஒரு பிரமாண்டமான மனித பிண்டத்தை யந்திரத்தின் மீது ஏற்றி உயிர் கொடுக்கும் மாதிரி கண்டேன். எவ்வளவு பயங்கரமானது. சிருஷ்டித்த கடவுளையே கேலி செய்ததாக அல்லவா இருக்கும். அந்தப் பேய்ச் சடலம் எழுந்து நிற்கிறது. பிரேதக் களையோடு விழிக்கிறது......

நான் பயந்துகொண்டு விழித்தேன். இதுதான் என் கதை போலும்!

மறுநாள் 'எனக்கு கதை வந்துவிட்டது' என்றேன்.

"நவம்பர் மாதத்தில் பயங்கரமானதொரு நள்ளிரவில்...' என்று கதையை ஆரம்பித்தேன். நான் அதை சிறுகதையாகவே எழுத நினைத்தேன். ஷெல்லியின் யோசனைப் பிரகாரம் உருவெடுத்ததுதான் இந்த நாவல்."

இந்த நாவலைப் பற்றி எழுதிய முன்னுரையில், சார்ள்ஸ் டார்வின், இன்னும் சில ஜெர்மன் சிந்தாந்திகள் ஆகியோரின் கருத்தே இக்கதைக்கு கரு என்கிறார் ஸ்ரீமதி ஷெல்லி. இலியாது, ஷேக்ஸ்பியரின் நடுவேனிற் கனவு, மில்டனுடைய சுவர்க்க நீக்கம் ஆகியவற்றின் போக்கில் அமைந்தது இக்கதை என்று அவர் கூறுகிறார், இந்தக் கதை ஜெனிவாவில் வைத்து எழுதப்பட்டது.

என்னுடைய தமிழ் நகல், அப்பட்டமான மொழிபெயர்ப் பல்ல. கதையின் போக்கை மட்டும் அனுசரித்துக் கொண்டு கோவை தகர்ந்துவிடாமல் எழுதப்பட்டது.

நம் நாட்டில் உள்ள நல்லரவான் கதை, யமனைத் தேடி சுரகுருவுக்காக தூதுபோன கதை முதலியனவும் இம்மாதிரி வாய்ப்பை அனுசரித்தவையே யாகும். கதையின் பெயர் விசேடங்கள் சிலரை மிரட்டலாம். ஆனால் கதைச் சத்து நம் பாவனைக்கு பொருந்தியதேயாகும். "பேயணையை முறித்திட்டு, பிணமெத்தை ஐந்தடுக்கி, நிலாத் திகழும் பஞ்ச சயனத்தின்" மேல் அமர்ந்த காளியை விடவா இது கோரமானது?

புதுமைப்பித்தன்

15-12-43

# ஆரம்பம்

[வால்டன் என்பவர் தமது சகோதரி ஸ்ரீமதி ஸாவிலுக்கு எழுதிய கடிதங்கள். அதில் அவர் தமது உத்தர பிராந்திய யாத்திரையில் கண்ட அதிசயங்களை இங்கிலாந்திலிருக்கும் தமது சகோதரிக்கு எழுதுவதாகப் பாவனை.]

எங்கள் கப்பல் உறைபனியில் மாட்டிக் கொண்டது. சுற்றிலும் மூடுபனி, பகல் இரண்டு மணிக்கு அது கலைந்து வெளிச்சம் வந்தது. என்னுடன் வந்தவர்கள் மனம் நொடிந்து போனார்கள். அச்சமயம் ஓர் அதிசயமான காட்சி. தூரத்திலே பனிவண்டி பூட்டி எவனோ ஒருவன் வடதுருவத்தை நோக்கி விரைவாகச் சென்றான். நாய்கள் வண்டியை இழுத்துச் சென்றன. கணத்தில் வண்டியும் மனிதனும் மறைந்து விட்டனர்.

மறுநாள் காலை கப்பலின் மேல்தட்டில் ஏதோ களேபரம். யாரோ ஒருவனுடன், மாலுமிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். பனி உருகி விட்டதினால் வண்டி தண்ணீரில் சிக்கிக்கொண்டு மிதந்தது. ஒரே ஒரு நாய் மட்டுமே உயிரோடிருந்தது.

நான் சென்றதும், தன் சங்கடத்தையும் ஆபத்தையும் உணராமல், ''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டான். ''உத்தர துருவத்துக்கு'' என்றேன். இந்த பதில் அவனுக்கு திருப்தி அளித்தது. என்னையும் ஏற்றிக்கொள்ளுங்கள் என்றான்.

அவனை கப்பலுக்குள் ஏற்றி கம்பளிபோட்டுப் போர்த்தி சிச்ருஷை செய்தோம்.

குணமடைய சில நாட்கள் சென்றது.

"உங்கள் அனுதாபத்துக்கும் பராமரிப்புக்கும் என் நன்றி. ஆனால் அதனால் பயனில்லை. நான் ஒரு காரியத்தை எதிர் பார்க்கிறேன். அது நடந்துவிட்டால் நிம்மதியுடன் என் உயிர்பிரியும், என் வரலாற்றைக் கேளுங்கள். அப்பொழுது நான் சொல்லுவது புரியும்" என்றான்.

MADURAI ... MADURAI 625021.

# அன்னியன் சொன்ன கதை

நான் ஜெனிவாக்காரன்; பிறந்தது அந்த ஊரில்தான், அங்கே செயலாக உள்ள புராதனக் குடும்பம் என்னுடையது தான். ஜெனிவாக் குடியாட்சி மகாசபைகளிலே என் மூதாதைகள் சொல்சக்தி படைத்து வந்ததுடன் தலைமை ஏற்று நடத்தியும் வந்திருக்கிறார்கள். என் தகப்பனாரும் வெகு காலத்துக்குப் பிறகுதான் – அவர் மூப்பு மேலிடும் தருணத்தில் தான் கலியாணம் செய்து கொண்டார்; நான் அப்போது பிறந்தேன்.

அவர் கலியாணம் செய்து கொண்டதே ஒரு தினுசு. அது அவருடைய குணத்துக்கு சிறந்த உதாரணம். அவருடைய நண்பர்களிலே போவர்ட் என்று ஒரு வியாபாரி. அதிர்ஷ்டம் என்ற சகடக்கால், கீழ்மண்டிப்பாய, செயலும் சிறப்புமாக இருந்த ஊரில் இருப்புக் கொள்ளாமல், முடிந்தவரை, வார்த்தைக்குப் பழுதில்லாமல், கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்துக் கொண்டு லூபெர்ஸ் என்ற ஊரில்போய்க் குடியேறினான். அங்கே தன் வறுமையும் துன்பமுமாக உருக்குலைந்து நாளைக் கழித்து வந்தான். என் தந்தைக்கு போவர்டிடம் பரமநட்பு. அவனுடைய வீண் கவுரவத்தால் ஏற்பட்ட விபரீதத்தைக் கண்டு மிகவும் நொந்தார். அவனைத் தேடிப்பிடித்துக் கொண்டு வந்து மீண்டும் பழையபடி செயலில் வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டுப் புறப்பட்டார். கடைசியாகக் கண்டு பிடித்தார். செயலில் இருந்தவன் நொடிந்து போனால் வேறு நோய் வேண்டுமா? அதுவே அவனைக் கிடத்தி விட்டது. மகள் பராமரிப்பில் படுத்த படுக்கையாக ஜீவனைத் தாங்கி வந்தார். என் தந்தை அங்கு சென்றபோது போவர்ட்டின் ஆவி

அகன்று விட்டது. மகள் அகதியாகி அழுது கொண்டு கிடந்தாள். ஈமக்கிரியைகளை முறைப்படி நடத்திவிட்டு, நேசனுடைய மகளை, அதாவது கரோலின் போவர்டை அழைத்துக் கொண்டு ஊருக்குத் திரும்பினர். இரண்டு வருஷங்கள் கழித்து அவளைக் கலியாணம் செய்துகொண்டார். அவர்களிருவருக்கிடையிலும், வயசு வித்தியாசம் ஜாஸ்தி. இருந்தாலும் சந்தர்ப்பம் அவர்களது பாசத்தைப் பிணித்தது. ஆனால், இளமையிலேயே இவ்வளவு அல்லல்களையும் பட்ட எனது தாயாரின் தேகம் பொள்ளலுற்றது. அவளுக்கு உடம்பில் வலுவுண்டாக்க தகப்பனர் அவளை தேசயாத்திரை அழைத்துச் சென்றார். இத்தாலியிலிருந்து ஜெர்மனிக்குப் போனர்கள்: அங்கிருந்து பிரான்ஸுக்கு வந்தார்கள்; நான் நேபிள்ஸில் பிறந்தேன். நான்தான் முதல் குழந்தை. அதன் பிறகு பல வருஷங்கள் வரை குழந்தை பிறக்கவில்லை. என் தாயார் பெண் குழந்தை வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

எனக்கு சுமார் ஐந்து வயசு இருக்கும்; அப்பொழுது நாங்கள் இத்தாலிக்கு அப்பால் உள்ள கோமோ ஏரி அருகே சுகவாசத்துக்காக சென்றிருந்தபொழுது, என் தாயார், ஏழ்மையில் அல்லாடி வரும் ஒரு குடும்பத்திலிருந்து ஒரு சிறுமியைத் தத்து எடுத்தாள். அக்குழந்தையின் அழகும், குணமும் ஒத்திருந்தது. அவள் பெயர் எலிஸபெத் லாவென்ஸா. அவளைப் பார்த்தவர்கள் நெஞ்சில் பாசம் சுரக்கும். அவள் வந்து எங்களில் ஒன்ருக வாழ்ந்து வரலானாள்.

சிறுவயதில் நாங்கள் இருவருமே இணைபிரியாது ஓடியாடித்திரிந்து வருவோம். எங்கள் குணம் ஒத்துப்போகிறது. அவளுக்கு காவியத்திலே, ஆசை; ஸ்விட்ஸர்லாந்தின், பனிகவ்விய மலை வளத்தில் அவள் மனசைப் பறிகொடுத்தாள். அவள் மனசு அழகில் ஈடுபட்டது; நானே காரண காரிய ரீதியில் எல்லாவற்றையும் துருவித்துருவிப் பார்ப்பதில் புத்தியைச் செலவிட்டேன்.

எனக்கு ஒரு தம்பி பிறந்ததுடன் எங்கள் பெற்றோருக்கு கால்கட்டு என்று சொல்ல வேண்டும். அவன் பிறந்ததுடன், இந்த தேசாந்திர யாத்திரை நின்று போயிற்று. ஊரோடு வந்து அங்கேயே நிலையாக இருந்தார்கள். என் தம்பிக்கும் எனக்கும் வயசில் ஏழு வருஷங்கள் வித்தியாசம்.

ஜெனிவாவில் ஒரு வீடு உண்டு. பெல்ரிவ் ஏரியின் கீழ் கரையில் உத்தியாபவனம் என்று ஒன்று உண்டு. எனக்கு ஜனசந்தடியே பிடிக்காது. பொதுவாக என் பள்ளிச்சகாக் களுடன் சேர்ந்து கும்மாளம் போடும் குணம் எனக்குக் கிடையாது. அவர்களைக் கண்டாலே ஒரு அசிரத்தை, அவர் களில் ஒருவன்தான் என் மனசைக் கவ்வினன். அவன் ஜெனிவாவில் ஒரு வர்த்தகர் மகன்; அவன் பெயர் ஹென்றி கிளெர்வெல். முயற்சி, உழைப்பு, ஆபத்து இவற்றை நாடும் மனம் படைத்தவன். வீர பரம்பரை சரித்தி ரங்களிலே ஆழ்ந்த பாண்டித்தியம் உண்டு. (மனுஷவர்க் கத்தில், எங்களைப்போல அதிர்ஷ்டம் இளமைப்போதிலே யாருக்கும் கிடைத்திருக்க மாட்டாது. அவ்வளவு மனோகர மாக கழிந்தது என்னுடைய இளமைக் காலம்.)

(இயற்கையின் ரகசியங்களை கண்டுபிடிக்கும் ஆசையை விதிதான் என் மனசில்விதைத்தது என்று சொல்லவேண்டும்.) எனக்குப் பதின்மூன்று வயசிருக்கும். தோனன் அருகே குளிப்புரை ஒன்று உண்டு. அங்கு நான் சிலரோடு சென்றி ருந்தேன். வெளியில் பருவம் சீராக இல்லை. ஒரு விடுதியில் நாளைக்கழிக்க வேண்டியதாயிற்று. அங்கே சில புஸ்தகங்கள் கிடந்தன. அதில் ஒன்று கார்னீலியஸ் அக்ரிப்பா எழுதிய கிரந்தம். அதைப்படித்துப் பரவசமானேன். புதுப்புது விஷயங்கள் என் மனசில் உதயமாயின. நான் படித்ததை என் தகப்பனரிடம் சொன்னேன். "கார்னீலியஸ் அக்ரிப் பாவா? விக்டர், வீணாக, அந்த அபத்தக் குப்பையைப் படித்து காலத்தை விரயம் பண்ணதே" என்றார்.

இப்படி ஆசையாக நான் சொல்லவந்ததை அபத்தம் என்று உதாசீனம் செய்யாமல், அக்ரிப்பாவின் சித்தாந்தங்கள் என்ன, அவை எப்படி உடைபட்டுப் போயின, நவீன சாஸ்திரம் எப்படி எல்லாம் வளர்ந்து ஓங்கி விட்டது என்பதையெல்லாம் எனக்கு எடுத்து விளக்கி இருந்தால், நான் அதை தூக்கிப்போட்டு விட்டிருப்பேன். ஆனால் அவரது உதாசீனம் என் ஊக்கத்தைத் தான் அதிகமாக வளர்த்தது. (செய்யாதே என்பதை செய்து பார்ப்பதுதானே சிறுபோதில் யாருக்கும் இருக்கக்கூடிய ஆசை.) நான் வீட்டுக்குத் திரும்பியதும், இந்த கிரந்தகாரர்களின் எழுத்துக்கள் எல்லாவற்றையும் சேகரித்தேன். **பார்ஸல்ஸஸ் அல்பர்டஸ் மாக்ஸஸ்** என்பவர்களுடைய ஆராய்ச்சிகளையும் வாங்கி வைத்துப் பார்த்தேன். எனக்கு இயற்கையின் நுட்பங்களை அறிவதில் மகாமோகம். நவீன சாஸ்திரிகளின் ஆராய்ச்சிகளை எவ்வளவுதான் நான் விரும்பி விரும்பிப் படித்தாலும், முடிவில், மனத்திருப்தி இல்லாமல் தான் திரும்பினேன்.

''சத்த சாகரத்தின் ஓரத்திலே, கூழாங்கற்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கும் குழந்தை மாதிரிதான் நான்'' என்று சர் ஐஸக் நியூட்டன் சொன்னாராம். நூதன சாஸ்திர பண்டிதர்கள் ஒவ்வொருவருமே இம் மாதிரி கூழாங்கல் பொறுக்கிகள் தான் என்று நான் நினைத்தேன்.

உள் நுட்பம் தெரிந்த பண்டிதர்கள், நிபுணர்கள் ஆகியோர் புராதன காலத்தில் ஆழ்ந்த ஞானம் படைத்துத் தான் இருந்தார்கள். நான் அவர்களுடைய சீடன். 18-வது நூற்றாண்டிலே இது ரொம்பவும் விகல்ப்பமாகப் படலாம். ஜெனிவாவில், கிடைக்கும் கல்வி வசதியை நான் பெற்றேன் என்றாலும், உண்மையில் அறிவு விருத்தியெல்லாம், என் மட்டில் சொந்த சம்பாத்தியமே. எங்கப்பாவுக்கு சாஸ்திர ஆராய்ச்சி கிடையாது. குருட்டுக்குழந்தை மாதிரி, அறிவுப் பசியைத் தீர்க்க நான் சொந்தமாக என் போக்கில் மல்லாடத்

தான் முடிந்தது. இந்த எனது குரு உபதேசம் சித்தாந்த மாளிகையையும் ஜீவரசத்தையும் தேடித்திரிய என்னை அலக் கழித்தது. (முடிவில் ஜீவரச நாட்டம் என் முழுமனதையும், உழைப்பையும் கவ்வியது. செல்வம் என்ன அற்பமான வஸ்து, உடல் கூட்டிலிருந்து நோய் நொடியை ஓட்டி, மனிதனை வாழத்தெம்பு படைக்கும்படி செய்துவிட்டால் எப்படிப்பட்ட மகத்தான சேவை யாகும்!)

என் கனவுகள் இம்மட்டோடு நிற்க வில்லை. பூத பைசாசங்களை அழைப்பது எப்படி என்பதையும் எனது கிரந்தகர்த்தர்கள் எனக்குக் கற்பித்தார்கள். அதையும் சாதிக்க ஆசைப்பட்டேன். என்னுடைய உபாசனைகள் மந்திரோச்சா டனங்கள் கைகூடி வரவில்லை யென்றால் எனது அனுபவ மின்மைதான் காரணம் என்று நினைத்துக் கொள்ளுவேன். க்ஷணநேரமாவது என்னுடைய கிரந்த-குருக்களை நான் சந்தேகித்தது கிடையாது. இப்படியாக என் மனசும் புத்தி யும், நொடிந்த உடைந்த உருக்குலைந்த சாஸ்திரங்களில் முக்குளித்து எழுந்தது.

எனக்கு பதினைந்து வயசு. பெல்ரிவ் வீட்டுக்கு குடி போயிருந்தோம். அப்பொழுது ஊழியின் இறுதிக்காலம் போல ஒரு சண்டமாரும் அடித்தது. ஜூரோமலை சிகரங்களின் பின் சரிவிலிருந்து புறப்பட்டது புயல். இடி வானத்தில் நாலா திசைகளிலுமிருந்தும் குமுறியது. நான் இந்த கோர நாடகத்தை ஆச்சரியத்துடனும் மனசு எக்களிப்போடும் பார்த்து வந்தேன். அப்படி நான் பார்த்துக் கொண்டிருக்கும்போது என் வீட்டுக்கு எதிரே சற்று தூரத்தில்நின்ற நெடுங்காலவிருக்ஷம் ஒன்றி லிருந்து நெருப்புக் கொப்பளித்துக்கொண்டு வருவதைக் கண்டேன். கண்ணைப் பறித்த அந்த ஒளி மங்கியதும் எதிரில் நின்ற மரத்தைக் காணவில்லை. வெறும் முண்டு ஒன்று தான் நின்றது. மறுநாள் அதன் அருகில் சென்று பார்த்த பொழுது, இடி அதிர்ச்சியால் பிளந்து விடாமல், நார் நாராக

கிழிபட்டு அடியோடு நாசமானதைக் கண்டேன். இதைப் போல சர்வ நாசமான எதையும் நான் எப்போதும் கண்டதே கிடையாது.

மின்சாரத்தைப் பற்றி ஏற்கனவே யாருமறிந்த நியதிகள் கூட எனக்கு இதுவரை தெரியாது. இடிவிழுந்து நாச மானதை பார்க்க வந்த கூட்டத்தில் இருந்த நிபுணர் ஒருவர் அதை எல்லாம் விளக்கினர். அவருடைய வார்த்தைகள் அக்ரிப்பாவையும், அல்பர்டஸ் மாக்னஸையும், பார்ஸல்சஸை யும் என் மனக்கோளத்தை விட்டுச் சற்று ஒதுங்கியது. ஆனல் விதிவலிது. சிறிது காலத்தில் மீண்டும் அவர்கள் என் மனப் பீடத்தில் ஆட்சி புரிந்தார்கள்.

எனக்குப் பதினேழு வயசாகிறது. என் தகப்பனர் என்னை இங்கோல்ஸ்டாட் சர்வகலாசாலையில் சேர்த்துவிடுவது என்று தீர்மானம் பண்ணினர். நான் புறப்படும் தேதிகூட நிர்ணயமாகிவிட்டது. அப்போது, என் ஜீவியத்தின் மீது கவியப்போகும் அந்தகாரத்தின் உற்பாதம்போல, ஒரு விபரீத நிகழ்ச்சி என் யாத்திரைக்கு குறுக்கே விழுந்தது.

எலிஸபெத்துக்கு விஷஜுரம் கண்டது. நோய் அவளைக் கடுமையாக வாட்டியது. என் தாயார் இரவு பகல் ஓயாமல், அகலாமல் இருந்து சிச்ருஷை செய்தாள். நோய் அவளை விட்டு அகன்றது; ஆனல் என் தாயைப் பற்றிக்கொண்டது; சாகும்போது நானும் எலிஸபெத்தும் கலியாணம் செய்து கொண்டு என் தம்பிமாரைப் பராமறித்தால், தள்ளாத வயதில் என் தகப்பனருக்கு ஆறுதலாக இருக்கும் என்று சொல்லி விட்டு உயிர்நீத்தாள். சாகும்போது அமைதியாய் ஆவி பிரிந்தது. ஈமக்கிரியைகளை நடத்திவிட்டு நான் இங்கோல்ஸ் டாட் போய்ச் சேர்ந்தேன்.

ஊர் சேர்ந்த மறுநாள் அறிமுகக் கடிதங்களைக் கொடுத்து பிரதான பண்டிதர்களை அறிமுகம் செய்து கொள்ள அவர்களை

நாடினேன். அப்பொழுதும், என்னை நசுக்கத்திட்டம் போட்ட விதி, இயற்கை தத்துவசாஸ்திர பண்டிதரான கிரேம்பிடம் முதலில் என்னை அழைத்துச் சென்றது என்று நினைக்கிறேன். அவர் பார்ப்பதற்கு குரூபி. ஆனால் அவரது அறிவில் இயற்கையின் நுட்பங்கள் அனைத்தும் மடங்கிக் கிடந்தன. அவர் என்னுடைய ஞானத்தைப் பரிசோதனை செய்தார். நான் படித்த கிரந்த கர்த்தர்களான, ரசவாதிகளின் பெயர்களை, விவரித்தேன். "இந்த அபத்தங்களை எல்லாம் படித்துக் கொண்டிருப்பதிலா உன் நாளையும் பொழுதையும் கழித்துக் கொண்டிருந்தாய்?" என்று கேட்டார்.

நான் "ஆமாம்" என்றேன். 'நீ இதுவரை செலவு செய்த ஒவ்வொரு நிமிஷமும் வீண்; நசித்துப்போன தத்துவங்களைத்தான் நீ உன் புத்தியில் இதுவரை சுமடு ஏற்றிவந்திருக்கிறாய். இதுகூட தெரியாமல் தெய்வமே, நீ எந்தப் பாலை வனத்தில் அப்பா குடியிருந்தாய். இந்தக் கட்டுக் கதைகள் யாவும் கவைக்கு உதவாது என்று எடுத்துச் சொல்ல உனக்கு ஒரு ஆளும் இல்லாமல் போச்சா? இந்தக் காலத்தில் அல்பர்டஸ் மாக்னஸ், பார்ஸெல்ஸஸ் ஆகியோருடைய சீடர்கள் யாரையும் பார்க்க முடியும் என்று நான் நம்பியதே கிடையாது. இனிமேல் நீ புதிதாகத்தான் உன் படிப்பை முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்' என்று சொல்லிவிட்டு நான் படிக்கவேண்டிய புஸ்தக ஜாபிதா ஒன்று எழுதிக் கொடுத்தார். தான் இயற்கை சாஸ்திரத்தை அடுத்த வாரத்திலிருந்து போதிக்கத் தொடங்க உத்தேசித்திருப்பதாகவும் அவரது சகாவான வால்ட்மன் பண்டிதர் ரசாயனம் கற்பிப்பார் என்றும் சொன்னார்.

நான் வீடு திரும்பினேன். கிரம்பின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. ரசவாதத்தை விட்டுத் தொலைக்கவேண்டும் என்பது எனக்கு முன்பே ஆசைதான். ஆனால் நவீன சாஸ்திர பண்டிதர்களின் ஆராய்ச்சிகளும் எனக்கு அற்பமாகவே பட்டது. ரசவாதம் வெறுங் கனவுதான். ஆனால்

வியர்த்தமான பெருங் கனவுகள் இல்லையா. நித்தியத்துவம், சக்தி முதலியன போல அற்பமான உண்மைகளைக் கொடுத்து இந்தப்பெருங்கனவுகளை வாங்க விரும்பினேன். இங்கோல்ஸ்டாட்டுக்கு வந்து இரண்டு மூன்று நாட்கள்வரை இந்த நினைப்புத்தான்.

வால்ட்மன் பண்டிதர் எப்படி இருக்கிறார் என்பதையும் பார்த்துவிடுவோம் என்று புறப்பட்டேன். வால்ட்மன், தம்முடைய சகாவுக்கு முற்றிலும் நேர்மாறானவர். வயசு ஐம்பதிருக்கும். மனசிலே அன்பு, தயை, கபோலத்திலே ஒன்றிரண்டு நரைகள், நிமிர்ந்த நடை, இவர்தான் வால்ட்மன் ரசாயன சாஸ்திரம் வளர்ந்ததைப் படிப்படியாக வர்ணித்தார். பிறகு சாஸ்திரத்தின் தற்கால நிலையை பருந்தோட்டமாக எடுத்துச் சொன்னார். சாஸ்திர பரிபாஷையை விளக்கினார். தற்கால ரசாயனம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அவர் உபன்னியசித்தது என்றும் என் மனதை விட்டு அகலாது.

புராதனர்கள் சொன்னது பெரிது; பாதித்தது ஒன்று மில்லை. ஆனால் நவீன விற்பன்னர்கள் பேச்சைப் பிரமாதப் படுத்தவில்லை. ஓர் உலோகத்தை வேறொன்றாக மாற்ற முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். ஜீவரசம் என்பது கானல்நீர் என்பதை அவர்கள் அறிவார்கள், அவர்கள் துளைவதெல்லாம் அழுக்கில்தான்; ஆனால் அபார உண்மைகளைக் கண்டுவிட்டார்கள். வரம் பெற்ற சக்தி அவர்கள் வசமாகிவிட்டது. அவர்களுக்கு வானத்து இடியை தருவிக்க முடியும்; பூகம்பத்தைப்போலப் பொம்மலாட்டம் காட்டுவார்கள். கட்புலனுக்கு வசப்படாத லோகத்தைக்கூட ஆட்டி விடுவார்கள்'' என்றார்.

என் மனசோ புது வழியை வகுத்து சிருஷ்டியின் ஆழ்ந்த ரகசியங்களை நாடவேண்டும் என்று சங்கல்பித்தது. அன்றிரவு என் மனம் ஒரே கொந்தளிப்பில் குமைந்தது. மறுநாள் வால்ட்மன் பண்டிதரை நாடினேன். என் ஆசையைச்

சொன்னேன் ; வாலிபத்தின் உத்சாகத்துடன் சொன்னே
நான் எதைப் படிக்க வேண்டும் என்று விநயமாகக் கேட்டே

"நீயே எனது உண்மைச்சீடன்; உறுதியைப்போ
உழைப்பும் இருந்தால் வெற்றிகாணுவாய்" என்று ஆ
வதித்து தனது ஆராய்ச்சி மண்டபத்துக்கு என்
அழைத்துச் சென்று கருவிகளைப் புழங்கும் முறையைப் பழ
கொடுத்தார்.

முயற்சி

இரண்டு வருஷங்கள் இங்கோல்ஸ்டாட்டில் இவ்வாறு ழிந்தது. நான் கல்வியை ஒரு வித வெறியுடன் தொடர்ந் தேன். அக்காலத்தில் நான் ஊருக்குப் போகவும் இல்லை. டிதங்கூட எழுதவில்லை.

இந்த இரண்டு வருஷங்களிலும் என் மனசு சில ரகசியங் ளை ஆராய்ந்து அவற்றை நாடித் தொடர்ந்தது. (இந்த ாஸ்திர ஆராய்ச்சி இருக்கிறதே, இது மோகினிப் பிசாசு ாதிரி. பற்றிக்கொண்டால் விடாது.) இந்த இரண்டு வருஷ ஆராய்ச்சி ரசாயனக் கருவிகள் சிலவற்றில் அபிவிருத்தியைச் ாதிக்கத்தான் எனக்கு வகை செய்தது. இது எனக்குப் புகழ் சம்பாதித்துத் தந்தது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நான் இதைச் சாதித்தபொழுது என்படிப்பு பூர்த்தியாகி விட்டது என்று நினைத்தேன். எனது மனம் நாடும் ஆராய்ச் சிக்கு உகந்த இடம் அது அல்ல; சொந்த ஊருக்கே திரும்பி விடலாம் என்று தீர்மானித்தேன். ஆனால் ஒரு சம்பவம் எனது தாமசத்தை நீடித்தது.

இயற்கைத் தோற்றங்களில் மனுஷ உடற்கூறு என் கவனத்தைக் கவர்ந்தது; ஜீவனுடன் நடமாடும் ஒவ்வொரு பிராணியையும் கவனித்தேன். அதை நடமாடச்செய்யும் சக்தி எது? இதுவே என் மனதில் எழுந்த கேள்வி. ஜீவ தத்துவம் என்ன? இது தெம்புமிக்க கேள்வி. இது புரிந்து கொள்ளமுடியாத ஒரு மூடுமந்திரம் என்றுதான் கருதப்பட்டு வந்தது. உடல்கூறு நுட்பங்களைப் பற்றிய சாஸ்திரங்களைக் கற்க ஆரம்பித்தேன். உண்மை நாட்டம் பெரும் வெற்றியாக

மாறுபட்டிராவிட்டால், இந்த வேலைகள் யாவும் எனக்( பெரும் சுமையாக மாறி இருக்கும் என்பதில் ஐயமில்ல நான் உடல்கூறு நூலைக் கற்றுத்தெளிந்தேன். அதுமட்டு போதவில்லை. மனுஷ உடம்பு இயற்கையாக அழுகி அழி தையும் கூர்ந்து கவனிக்க வேண்டியிருந்தது. எனது கல்வியில் பிரதான போதனை பயமின்மை. இதை இளமை லேயே படியவைத்ததற்கு என் தகப்பனுருக்குத்தான் நா நன்றி செலுத்த வேண்டும். பேய் பிசாசு என்ற பயம் சற் மில்லாமல் சமாதிக் குழிகளிலும், கல்லறைகளிலும் படிப்ப யாக தேகம் எப்படி அழிகிறது என்பதை நேரில் கவனி நடமாடித்திரிந்தேன். மனிதனுடைய உடம்பு செத் விழுந்ததும் எவ்வளவு மகா கேவலப்பட்ட வஸ்துவாகி வி கிறது? ரத்தம் துளும்பிய ஜீவன் ஓட்டம் ஒடுங்கியது உடம்பு அழுக ஆரம்பிக்கிறது. கண்ணையும், மூளையையு கிருமிகள் ஆட்கொள்ள ஆரம்பிக்கின்றன. ஜீவகளையிலிருந் ஜீவனற்ற நிலை ஏற்படுவதற்கு துணையாகவுள்ள காரணங்க எல்லாம் வெகு நுணுக்கமாகப் பரிசோதனை செய்து வந்தேன் உயிர், பிறகு உயிரின்மை; அதேமாதிரிதான் மரண அதிலிருந்து உயிர். அதாவது மரணம் சம்பவிப்பதற்கு துணை யாக நின்ற காரணசக்திகளைப் போக்கினால், உயிர்நிலை மீண்டு நேராதா? திடீரென்று இந் தஞானம் உதயமாயிற்று. முன்பே பின்போ ஜீவகளை இல்லாத ஒரு வஸ்துவில் உயிரை பெய்து பார்க்காமல் செத்ததை, சாவின் குணங்களைப்போக் மீண்டும் உயிர்ப்பிக்கலாம் அல்லவா? முடியும் என்று தோ றியது.

நான் சொல்லுவது வெறியனுடைய மனசின் ஓட் சாட்டங்கள் அல்ல, முயற்சி பலனளித்தது. ஜீவரகசியம் என கைக்கு வசப்பட்டது. கடைசியாக ஜீவகளையின் அந்தரங்க தையும் வாழ்வின் நுட்பத்தையும் கண்டுபிடித்து விட்டேன் இதுமட்டுமா? ஜடவஸ்துவில் உயிரைப் பெய்து அதை இயக்கிவைக்கும் சக்தியும் என் வசமாயிற்று.

இந்த தேவ ரகசியத்தை வைத்துக்கொண்டு நான் ரமித்துப்போனேன்; என்ன செய்வது, அதை எந்த வகை ில் உபயோகிப்பது? தயங்கினேன். நான் எதற்கு உயிர் காடுத்துப் பார்ப்பது? அதற்குத்தக்க உடல்கூறு செய்யும் கை என்ன? இது மகா கஷ்டமான சாதனை. நம் உடம்பில் ணும் ஒவ்வொரு தசை நாரையும் நாளத்தையும் நரம்பை ம் எப்படிச் செய்து இணைப்பது. அதில் விழுந்து வேலை சய்தேன். மிருகராசிக்கு உயிர்கொடுத்துப் பார்க்க என் னம் ஒப்பவில்லை. மனிதனையே சிருஷ்டித்துப் பார்க்க வண்டும் என்று என் மனம் தவித்தது. முயன்று முயன்று ல தோல்விகளைக் கண்டேன் சிறு சிறு நாளங்களையும் ரம்பு வகைகளையும் செய்வது மகா கஷ்டமாக இருந்ததினால், ிரம்மாண்டமான ஒரு மனிதச் சடலத்தை அமைக்க முற்பட் டன். எட்டடி உயரம். அதற்கேற்ற அங்கங்கள்? உடற் றுறு அமைப்புகள். பல நாட்கள் பாகங்களைத் தேடித்திரிந்து சமித்தேன்.

புயலின் கொந்தளிப்போடு நான் உழைத்தேன். மரண ும் ஜீவனும் ஒரு எல்லைக் கோட்டுக்குள் வசமாயின. நான் ான் இருள் மண்டிய லோகத்திலே ஜீவகளை என்ற சூர்யோ யத்தை உண்டுபண்ணுகிறவன். நான் சிருஷ்டிக்கும் இந்த ம்சம் என்னைத் தந்தையிலும் மேலாகப்பாவிக்கும். செத்தழு ிய உடலிலிருந்து மரணத்தைப்போக்கி அதற்கு உயிர் காடுக்கும் வகையை நான் கண்டுபிடிப்பேன்.

இந்தமாதிரி ஆவேசத்தில் உழைத்து வந்ததால், எந்த ாதிரி வைரம் பாய்ந்த உடலும் நரம்பும்தான் தாங்கும். னக்கே உடம்பு நடு நடுங்குகிறது.

தனித்த ஒரு வீடு, நான் உழைக்கும் அறை மாடிப்படி ாண்டி, ஒரு மூலையில் இருந்தது. பிரேதக் குழிகளிலிருந்தும், ஆஸ்பத்திரி பிணமறுக்கும் கிடங்குகளிலிருந்தும், கசாப்புக்

கடைகளிலிருந்தும் எனக்குத் தேவையான அங்கங்கள் வந்தன. இவற்றைக்கொண்டு இரவு பகல் ஓயாது உழைத்து, ஓர் உடல் கூட்டைக் கட்டி முடித்தேன். இதற்குள் புற உலகிலும் மாறி மாறி பருவங்கள் ஒன்றை யொன்று தொடர்ந் தன. நான் யாருக்கும் எழுதாமல் கொள்ளாமல் இந்த முயற்சி யில் ஈடுபட்டிருந்ததினுல் என் தகப்பனுரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ''உன்னிடமிருந்து கடிதம் வராமலிருப்பது உன்னுடைய இதர கடமைகளிலும் அப்படித்தான் இருந்து வருகிருய் என்பதற்கு போதுமான அத்தாட்சி.''

தகப்பனுருக்கு எனது நாட்டம் புரியுமா? இருந்தாலும் எனது வேட்கை என்னை விழுங்கியது. அவர் என்னைப் பிசகாக நினைத்ததில் என்ன அதிசயம். இருந்தாலும் ஒரு விதத்தில் நான் குற்றவாளிதான். (மனிதன் என்ருல் நிதானம் வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு அதற்குள் ஆழ்ந்து விட லாகாது. அறிவுத்தேட்டமும் இந்த நியதிக்குள் அடங்கியது தான். இருந்தாலும் நான் சட்டை செய்யவில்லை.)

இலையுதிர்காலமும் வந்தது. எனது வேலையும் ஏறக் குறைய முடிந்தது. இந்தமாதிரி ஆவேசத்தில் வேலை செய்த எனக்கு நாடியில் அதிர்ச்சி கண்டுவிட்டது. சிறு சத்தம் கூட என்னை திடுக்கிட வைக்கும். உடம்பிலே சிறிது ஜுரம் வேகம் ஏறி அடித்தது. நானும் தேய்ந்து வந்தேன். உடம்பு பொள்ளலாயிற்று. வேலையை முடித்துக்கொண்டு ஓய்வும் நிர்மதியும் பெற்று மறுபடியும் திடம் பெறலாம் என்று நினைத் தேன். எனக்கேது ஓய்வு?

# பிரேத மனிதன்

நவம்பர் மாதம். நடுராத்திரி என் வேலை முடிந்தது; நான் செய்து வைத்த உடல் கூட்டைப் பார்த்தேன். மன உளைச்சல் என்று கூறும்படியான கவலையுடன், அதற்கு உயிர் பெய்யும் கருவிகளைத் திரட்டி எடுத்தேன். உயிரற்ற உடலம் என் காலடியில் கிடந்தது. மங்கிய வெளிச்சத்தில் அந்தச்சடலத்தின் கண்கள் திறந்தன. அது மூச்சு விட்டது அது கால் கைகளை ஆட்டியது.

நான் செய்து வைத்த மனித ராசியை எப்படி விவரிப்பது, அவனது அங்கங்கள் லக்ஷணத்துக்குப் பொருந்தி இருந்தன. முகம் அழகாக இருக்கவேண்டும் என்று விரும்பினேன். அழகா? அடதெய்வமே. அழகா அது? மஞ்சள் பூத்த சர்மம், உள்ளடக்கிய நாளங்களை சற்றே மறைத்தது கருத்த சிகை, முத்துப்போன்ற பல்வரிசை. ஆனால் யாவும் ஒன்று சேர்ந்து மகாகோரமாகத்தானிருந்தது. கண்விழி தேக்கமற்று தெளிவற்று விகாரமாக இருந்தது. உதடுகள் நீலம் பாரித்துக் கிடந்தன.

மனித குணத்தைப்போல மனிதனுடைய இதர அமைப்புக்களை லேசில் மாற்றமுடியாது. இந்த இரண்டு வருஷங்களாக இந்த உடற்கூட்டில் உயிர் பெய்ய என் வலுவை அழித்துக் கொண்டேன். ஆசை நிறைவேறியதும், நான் செய்து வைத்த உடற்கூறு எனக்கே வெறுப்பைத் தந்தது. என் மனசைக் குமட்டியது. உயிர்பெய்த அந்தச்சடலத்தைக் காணச் சகியாமல் நான் ஓடி வந்தேன். படுக்கையில் விழுந்தேன். மனசின் கொந்தளிப்பு அடங்கும் என்று கண்களை மூடித் தூங்க முயன்றேன். தூங்கும்போது ஒரு சொப்பனம். இங்கோல்ஸ்டாட்தெருவிலே எலிஸபெத்தைக் கண்டமாதிரி.

ஓடிப் போய் அவனைத் தழுவி முத்தமிட்டேன். என் கைக்குள் சிக்கியது என் தாயாரின் சவம். அவளது சவத்தை மூடியிருந்த துணிமீது புழுக்கள் நெளிந்தன. கூக்குரலிட்டு விழித்தேன். மங்கிய நிலவொளியில் நான் செய்து வைத்த பிரேத சரீரம் ஜன்னல் வழியாக, உள்ளறைக்குள் புகுவதைக் கண்டேன். நான் செய்து வைத்த ஜீவராசி என்னுடைய கட்டில் திரையை நீக்கிக் கொண்டு என்னை நோக்கியது. அந்தப் பார்வை—கண்கள் என்று சொல்லுவது அதை? அந்த உறுப்பைக் கொண்டு என்னையே விழித்து நோக்கியது. பேச முயன்றது. ஆனால் உறுமத்தான் தெரிந்தது. வாயைத் திறந்ததும் வெற்றுச் சப்தங்கள்தான் வெளிவந்தன. என்னைத் தடுத்து அமர்த்த முயன்றது. நான் ஓடித் தப்பித்தேன். நான் குடியிருந்த வீட்டு முற்றத்தில் போய், இரவு முழுவதையும் அங்கேயே கழித்தேன். இரவு முழுவதும் நடந்து நடந்து காலும் கடுத்தது. நான் உயிரைக் கொடுத்து பிரேத பைசாசம் என்னை விரட்டிக் கொண்டு வந்துவிடுமோ என்று பயந்து பயந்து பொழுதைக் கழித்தேன்.

அதன் முகம் என் மனசில் உறையேற்றிய பீதி வார்த்தைக்குள் அடங்காது. எகிப்தியர் பதனிட்டுப் புதைக்கிறார்களே, அந்தச் சரீரத்துக்கு உயிர் வந்தாலும் இவ்வளவு கோரமாகத் தோன்றாது. அந்தச் சடலத்தைக் கட்டி முடிக்கு முன்பு அதைப் பார்த்திருக்கிறேன். அப்பொழுதும் அது அழகற்றிருந்தது. ஆனால் அதற்குள் உயிர் ஓட ஆரம்பித்த பிற்பாடு அதன் கோரம் காணச் சகிக்கவில்லை.

மறுநாள் காலை, வாசல்காரன் கதவைத் திறந்ததும் வெளியே வந்தேன். கால் கொண்ட திசையில் சென்றேன். பயம்தான் என்னை உந்தித் தள்ளியது. எங்கு போகிறேன் என்ற பிரக்ஞையே இல்லாமல் நடந்து கொண்டே இருந்தேன்.

இப்படிச் சென்று கொண்டே இருக்கும்போது எதிரே ஒரு வண்டி வந்தது. அதில் எனது தோழன் கிளர்வெல் வந்தான்.

அவன் வருகை எனக்கு ஊர் ஞாபகத்தை உண்டுபண்ணியது. “பிராங்கன்ஸ்டீன் உன்னிடமிருந்து கடிதம் வராததினால் உன்னைப் பார்த்து வரும்படி உன் தந்தை அனுப்பிவைத்தார்; உடம்புக்கு என்ன ஒருமாதிரியாக இருக்கிறாயே?” என்றான்.

என் மனசில் கிடந்த ரகசியங்களை நான் எப்படி அவனிடம் சொல்லுவது. நரம்பதிர்ச்சியின் ஆதிக்கம் தலைதூக்கியது. நோய் என்னைக் கிடத்திவிட்டது. பல மாதங்கள் வரை நான் பிரக்ஞையற்ற நிலையில் கிடந்தேன். எனக்குப் பணிவிடை செய்து ஆளாக்கி அப்புறம் எலிஸபெத் கொடுத்த கடிதத்தையும் கொடுத்து ஆறுதல் சொன்னான் கிளர்வெல். நண்பன் என்றால் அவன்தான்.

# பழியும் பாவமும்

நாங்கள் இருவரும் ஊருக்குத் திரும்புவது என்று திட்டம் போட்டிருந்தோம். ஆனால் கிளர்வெல், 'இந்த ஊர் சுற்று வட்டாரத்தை (இங்கோல்ஸ்டாட் பிரதேசத்தை) கால் நடையாகச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பலாமே?' என்றான். நானும் அவனுடைய ஆசைக்கு ஒத்துப்பாடி, ஊர்சுற்றப் புறப்பட்டேன். யாத்திரை குதூகலமாகக் கழிந்தது. ஆனால் கோடை இடிமாதிரி எங்களுக்கு ஒரு கடிதம் காத்திருந்தது. என் தகப்பனார் எழுதியிருந்தார். விதியின் விபரீத விளையாட்டை என்னவென்று சொல்லுவது.

கடிதத்தின் சாரம் இதுதான். என் அருமைத் தம்பி வில்லியம் இறந்து போனான். சாவும் துர்மரணம். வியாழக் கிழமை (மே 17ம் தேதி) **பிளெய்ன் பாலய்ஸ்** என்ற இடத்துக்கு என் தகப்பனார் எலிஸபெத்தையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு உலாவப் போனாராம். மாலை நேரமும் காற்றும் சீராக இருந்ததினால் எதிர்பார்த்ததைவிட வெகுதூரம் சென்றுவிட்டார்கள். திரும்புமுன் நன்றாக இருட்டிவிட்டது. முன்னால் ஓடிக்கொண்டிருந்த சிசுக்கள் **வில்லியமும் எர்னஸ்டும்** காணவில்லை என்பது இருட்டின பிறகுதான் தெரிந்தது. நாங்கள் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்திருந்தோம். கடைசியில் எர்னஸ்ட் வந்தான். வில்லியத்தைப் பார்த்தீர்களா என்று கேட்டான். தன்னுடன் அவன் ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்ததாகவும், ஒளியச் சென்றவனைக் காணவில்லை என்றும் சொன்னான்.

நாங்கள் இருட்டில் வெகுநேரம் தேடினோம். அகப்படவில்லை. அவன் வீட்டுக்குத் திரும்பியிருக்கக்கூடுமென்று எலிஸபெத் சொன்னாள். வீட்டுக்கு வந்தோம். அங்கும் காணவில்லை. பிறகு தீவட்டியோடு ஆள் துணையுடன் திரும்பி வந்து தேடினேன். பசும்புல் தரையில் அவனைப் பிணமாகக் கிடத்தி இருந்ததை அதிகாலை ஐந்து மணி சுமாருக்குக் கண்டேன். எலிஸபெத் ஆறாத் துயரில் ஆழ்ந்துவிட்டாள். உன்னால்தான் அவளைத் தேற்ற முடியும். உடனே புறப்பட்டு வா.'' சேதியறிந்த நாங்கள் உடனே ஊருக்குப் பயணமானோம். வழிநெடுக மனசை சோகம் பிடுங்கித் தின்றது. ஆறு வருஷங்கள்வரை நான் காணாத என் நாட்டைக் கண்டேன். அந்த ஆறு வருஷங்களில் என்னென்ன மாறுதல்கள். ஊரை அணுக அணுகச் சொல்லமுடியாத பீதி என்னை வாட்டி வருத்தியது. மறுபடியும் பழைய நோய்க்கு ஆளானேன். இரண்டு நாட்கள் லாவ்ஸென்னியில் தங்கினேன், சூழ்நிலையின் சாந்தமும் தெளிவும் எனக்குச் சிறிது நிம்மதியை ஏற்படுத்தியது. கடைசியாக ஊருக்கு வந்து சேர்ந்தேன்.

ஊரை நெருங்கும்போது நன்றாக இருட்டிவிட்டது. எதிரில் நின்ற மலைகூடத் தெரியவில்லை. மனசில் மீண்டும் அந்தத் துன்பப் படலம் கவிந்தது. கட்புலனுக்குத் தென்பட்டது தீமையின் சூழ்நிலை. மனுஷ வர்க்கத்திலே அல்லாடுவதற்கு பிறப்பிக்கப்பட்ட ஜீவன் நான் என்று அறிந்தேன்.

எதிர்பார்த்தபடி நடக்கத்தான் நடந்தது. ஆனால் நான் எதிர்பார்த்தது நடந்ததில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இல்லை.

நான் ஜெனிவாவின் சுற்று வட்டாரத்துக்குள் புகுந்தபோது, கும்மிருட்டாகிவிட்டது. நகரத்தின் கோட்டைக் கதவுகளை அடைத்துவிட்டார்கள். நகருக்கு சுமார் மூன்றரை மைல் தூரத்தில் உள்ள ஒரு குக்கிராமத்தில் ராத்திரிப் பொழுதைக் கடத்திவிட வேண்டியதாயிற்று. வான மண்டலம் மாசு

மருவற்றுக் கிடந்தது. என் சகோதரன் வில்லியம் மடிந்த இடத்தைப் பார்க்க ஆசை எழுந்தது. நகர் வழியாகப் போக முடியாததாகையால், ஒரு படகை அமர்த்திக் கொண்டு ஏரி மார்க்கமாக பிளெய்ன்பாலெய்ஸுக்குப் போனேன். படகில் இருக்கும்போது, தூரத்தில் **மாண்ட்** பிளாங்க் சிகரத்தில் மின்னல் விளையாடுவதைக் கண்டேன். என்ன என்ன வடிவம் எல்லாம் எழுந்தது. புயல் வருவதை அறிந்து படகை விரைவாக ஓட்டிச் சென்று கரையில் இறங்கினேன். காற்றின் ஓட்ட சாட்டத்தைக் காண ஒரு குன்றின்மீது ஏறிக்கொண் டேன். வானம் கருத்தது. மழைத்துளி பருக்கைக் கற்கள் மாதிரி விழுந்தன. அதன் உக்கிரம் நிமிஷத்திற்கு நிமிஷம் வலுத்தது. புயல் என்னைச் சூழ்ந்துகொண்டது. இடியும் மின்னலும் இருட்டைக் கிழித்துக் கூத்தாடின. ரௌத்திரா காரமாகக் கவிந்த புயலை பிரமிப்போடு நான் பார்த்துக்கொண்டு நின்றேன். மனம் **வில்லியத்தை** நினைத்து அழுதது.

திடீரென்று ஒரு மின்னல் வாள் வீச்சு. எனக்கு அருகில் இருந்த ஒரு மரத்து மறைவில் ஓர் உருவம் மறைந்தது. இன்னும் ஒரு மின்னல், ஒண்டி நின்றது யார் என்று பார்த்தேன். பிர மாண்டமான உருவம். நான் உயிர்பெய்து உண்டாக்கிய பிரேத மனிதன். அவன் எப்படி இங்கு வருவான்? க்ஷணத்தில் வில்லியத்தைக் கொலை செய்த கை யாருடைய தென்பதைப் புரிந்துகொண்டேன். அந்த மின்வெட்டு, அவன் செங்குத்தாக நின்ற பாறைக் குன்று ஒன்றில் தொத்தி ஏறி மறைவதைக் காட் டியது. மான்ட்ஸாலீவ் சிகரத்தில் அவன் மறைந்து விட்டான்.

இந்தப் பிரேத மனிதனுக்கு நான் உயிர் கொடுத்து இரண்டு வருஷங்கள் கடந்து விட்டன. இதுதான் இவனது முதல் கொலையா? இவனை இப்படியே மனித வம்சத்தின் மீது வேட் டையாடிக் கொண்டிருக்கும்படி விட்டுவிடுவதா?

மறுநாள் விடிந்ததும் ஊருக்குள் புகுந்தேன். வீட்டுக்குச் சென்றேன். என் சகோதரனைக் கொன்றது யார் என்பது தெரி

ந்துவிட்டது. நான் திடுக்கிட்டேன். என் ரகசியம் வெளியாகி விடுமோ ; என்று நடுநடுங்கினேன்.

எங்கள் வீட்டில் **ஜஸ்டி**ன் என்ற குட்டி வளர்ந்து வந்தாள். நல்ல அமரிக்கையான பெண். கண்ணுக்கும் குளிர்ந்த ரூபம். அவள் கொன்ருளாம். வில்லியம் கழுத்தில் கிடந்த சங்கிலி அவளிடம் இருந்ததாம். அவளேச் சிறையில்போட்டு அடைத்து வைத்திருந்தார்கள். விசாரணே நடந்தது. அவள் 'தான் நிரபராதி' என்று மன்ருடினுள் அவளது பையில் சங்கிலி கண்டுபிடிக்கப் பட்டபின் நீதிபதிகளுக்கு வேறு அத்தாட்சி எதற்கு ? வீட்டிலிருப்போரெல்லாம் அவள் நிரபராதி என்று நிரூபிக்கச் சாட்சி சொன்ஞர்கள். என்ன சொல்லி என்ன பயன் ? தூக்கு மேடை ஜஸ்டினே உண்டு பசி தீர்ந்தது.

# சந்திப்பு

என்னுடைய துயரத்தைக்கண்ட என் தந்தை என் ரகசியத்தை அறியாமல், "மகனே, இந்தமாதிரி நீ ஓயாமல் துக்கப் பட்டுக் கொண்டிருப்பது, இறந்தவர்களுக்குப் பொருந்திய வகையில் மரியாதை செலுத்துவதாகாது. நீ யல்லவா எங்களை எல்லாம் தேற்றுவதற்கு ஆறுதல் சொல்ல வேண்டும்" என்ருர். அவர் கண் கலங்கி நீர் சிந்தியது.

நாங்கள் ஜெனிவா வீட்டைவிட்டு பெல்ரீவ் மாளிகைக்குக் குடிபோனேம். இந்த வீட்டுக்கு வந்ததில் எனக்கு ப்ரம திருப்தி. ஜெனிவாவில் என்ருல், இருட்டி விட்டதும் வேலைக் காரன் கோட்டைக் கதவுகளை அடைத்து விடுவான். இருட்டில் நிம்மதியாக என் இஷ்டம்போல நடமாட சௌகரியமாக இருந்தது. இங்கே அப்படி இல்லை. பெல்ரீவில் எங்கள் மாளிகையை ஒட்டி ஏரி. அதனுல் என் இஷ்டம்போல படகை எடுத்துக் கொண்டு வெளிச்சென்று வர ரொம்பவும் சௌகரியமாக இருந்தது. ஜஸ்டின், வில்லியம் இவர்களுடைய பரிதாப முடிவுதான் என்னை இரவு பகல் வாட்டிவந்தது.

எலிஸபெத் எனக்கு ஆறுதல் சொல்லித் தேற்ற முயன்ருள். "ஜஸ்டின் சாகும்வரை, தீமை என்பதெல்லாம் புஸ்தகத்தில் கதைக்கு சவுகரியமாக எடுத்துக்கட்டின காரியம் என்று நினைத்துவந்தேன். உண்மையை இப்போது பார்க்கப்போனுல் மனித வர்க்கமே ரத்தப்பசி கொண்ட பிசாசுக் கூட்டமாகத் தெரிகிறது. அற்ப நகைக்காக யாரேனும் கொலை செய்வார்களா? அதுவும் வளர்த்துப் பேணி நடத்திய ஒருவருடைய மகனை.

இது வாஸ்தவமானுல், அன்பு என்பது அவள் மனதிலிருந்தே வேரோடு பிடிங்கி எறியப்பட்டிருக்கவேண்டும். யார் ஒருவரும் சாவது என்ருல் அதில் எனக்கு சம்மதமே கிடையாது. பொய் நிஜம்போலத் தோற்றும்பொழுது, யாரால் சந்தோஷமாக வாழ முடியும் ? வில்லியமும், ஜஸ்டினும் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய கொலேகாரன் தப்பித்துவிட்டான். கவுரவத்துடன் ஊருக்குப் பெரியவனுகை வாழ்வு நடத்தலாம். கொலேக்காக எனக்குத்தூக்குத் தண்டனே கிடைத்தது, அதிலிருந்து தப்புவதற்கு அவனுடன் இடம் மாறிக்கொள் என்ருல் நான் ஒப்பமாட்டேன்.''

இப்படி அவள் சொல்லுவதைக் கேட்ட எனக்கு ஏர்பட்ட மன உளேச்சல் சொல்லி முடியாது. நான்தானே இந்தக் கொலேகாரன். என்முகத்தில் துயரக்குறி அதிகமாவதைக் கண்ட எலிஸபெத், "இந்த நிகழ்ச்சிகள் உன்னே அதிகமாகத்தான் வாட்டிவிட்டன. ஆனுல் நீ இந்த மனக்கறுப்புகளுக்கு இடம் கொடுத்து நையாதே, நாங்கள் உன் அருகில் இல்லேயா ?'' என்ருள்.

இங்கு எனக்கு இருப்புக் கொள்ளவில்லே. திடீர் திடீரென்று தேசாந்திர வெறி தோன்றி விடும். இந்த மாதிரியான ஒரு மன நிலேயிலே நான் ஒரு நாள் வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டேன். ஆல்ப்ஸ் மலே பள்ளத்தாக்குகளில் சுற்றித் திரிந்து, நித்தியவஸ்துக்களான அவற்றின் அழகில் மனித வம்சத்தின் துன்பங்களேயையே மறக்க விரும்பினேன். நான் **ஷாமினே** பள்ளத்தாக்கை நோக்கிப் பிரயாணமானேன். அந்தப் பாதையில் சென்று ஆறு வருஷங்களுக்கு மேலாயின. பாதிவழி குதிரையில் சென்றேன். மலேப்பாதை சீர்கேடாக இருந்ததினுல் பொதி கழுதை ஒன்றை அமர்த்திக் கொண்டு அதன்மேல் ஏறிக் கொண்டேன். **ஆர்வ்** பள்ளத்தாக்குக்குள் புகுந்தேன். இரண்டு பக்கமும் பாறைச் சுவர் போல செங்குத்தான குன்றுகள். இப்பொழுது தலேயில் உருண்டு விடுமோ என்று அஞ்சும்படி பெரும் பெரும் கற்கள் சரிந்தும் கோணியும் சரிவில் குந்தியிருந்

தன. பாறைக்கு ஊடே நதி கொப்பளித்துக் குமுறி காதை செவிடுபடுத்தியது பிரவாகம் பள்ளத்தில் விழுந்த பேரொலி சர்வ சக்திவாஞன மூலாதாரத்தின் திருநாமத்தையே பராக்கு சொல்லியது. மூலதாரத்தின் பஞ்ச பூதங்களின் பயங்கர சக்தி என் மனசில் பயத்தைப் பதிவித்தது. பள்ளத்தாக்கிலிருந்து மேட்டில் ஏற ஆரம்பித்தேன். சூழ்நிலையின் மகத்துவம் சொல்லுக்கடங்காத வியப்பை ஊட்டியது. **ஆல்ப்ஸ**மலையின் பனிச் சிகரங்கள் வெள்ளை **பிரமீதுகள்** [எகிப்திய நாற்பட்டை கோபுரம்] மாதிரி வேற்று மனுஷ பரம்பரையின் பாரம்பரிய சொத்துப்போல தலை நிமிர்ந்து ஒளிவிட்டன.

நான் **பெலிஸர்** பாலத்தைத் தாண்டினேன். அங்குதான், ஆர்வ்நதி மலையைக் கிழித்துக் கொண்டு வகுத்தபள்ளத்தாக்கு ஆரம்பமாகிறது. அதற்கும் உயரமான மலையில் ஏறினேன் **சாமௌனி** பள்ளத்தாக்குக்குள் புகுந்தேன். நான் சற்று முன் கடந்த ஸெர்வோ பள்ளத்தாக்கு மாதிரி இதுவும் மனசில் மலைப் பூட்டும் அழகு பூண்டு நின்றது. வழியிலே ஜனநடமாட்டமற்ற அறிகுறிகள் அரிதாகி பனிப்பாறைகள், உறைபனி நதிகள் இவைகளின் ஆதிக்கம் ஓங்கின. பனிப் பாறைகள் உருண்டு உடைந்து சிதறும் சப்தம் காதைசெவிடுபடுத்தியது. புழுதிப் படலம் எழுவதுபோல பனிக்கட்டித் தூசு ; பெரும் பனிப்பாறை உருண்டு நசித்த வழியைக் காட்டியது.

தூரத்திலே **மான்ட் பிளாங்க்சி**கரம் மனிதனுக்கு எட்டாத் தொலைவில் நிற்கும் லட்சியம்போல மலைக்கு மகுடம் கவித்தது. பகல் முழுதும் அந்தப் பள்ளத்தாக்கிலே கால் சென்ற திசையெல்லாம் நடமாடினேன். ஆர்விரான் நதியின் உற்பத்தி மூலத்தைக் கண்டேன். சுற்றிலும் ஆழ்ந்தநிஷ்டையில் அமர்ந்த பிரமாண்ட பரம்பரைபோல நின்ற சிகரங்களைக் காண மனசிலே ஒரு நிம்மதி தோன்றியது. இரவை அங்கேயே கழித்தேன். அவ்வளவும் சொப்பனமா ? நான் மறுநாள் காலையில் எழுந்த போது அவை எங்கே ஓடி ஒளிந்தன. மனசில் குடிபுகுந்த சாந்

தம் எங்கே? ஏனோ இந்த இருட்படலம் மறுபடியும் என் மனசை இப்படிக் கவ்வவேண்டும்? மனசை விட்டு ஓடுவதுபோல நான் மலைமேல் ஏறிக்கொண்டே சென்றேன். வழியிலே உறை பனி நதி யொன்று குறுக்கிட்டது. மாண்ட் அன்வர்ட் அங்கிருந்து சுமார் ஒரு காதத்திற்குள் தான் இருக்கும் நான் நின்றிருந்த இடத்துக்கு சதிக்க எதிரில் எழுந்த அந்த மலைக்கு அப்பால் மாண்ட் பிளாங்க் கம்பீரமாக நின்றது. துன்பம் மண்டிய என் மனம் இக்காட்சியைக் கண்டு எக்களிப்பில் துள்ளி மகிழ்ந்தது. "மலையுலாவும் தேவ கணங்களே என்னையும் உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள்!" என்று கூவினேன்.

திடீரென்று தூரத்திலே மனித உருவொன்று தோன்றியது. என்னை நோக்கி அசுரகதியில் தாவித் தாவி விரைந்து வந்தது. நான் கூசிக்கூசிக் கால்ஊன்றிய பனிப்பாறைகளை ஒரே குதியாகத் தாவி வந்தது அவ்வுருவம். திடீரென்று ஒரு குளிர்காற்று அது மலையின் சம்பத்து. என்கண்கள் ஏற்க வலுவின்றி மூடிக் கொண்டன, அதற்குள் மறுபடியும் கண்களைத் திறக்கு முன் அந்த உருவம் என்னை நெருங்கிவிட்டது நான் உயிர் கொடுத்து உண்டாக்கிய பிரேத மனிதன். நான் பார்க்க விரும்பாத பிணம் தூக்கி உலாவும் பேய். அவன் என்னை நெருங்கினான். முகத்திலே நகைப்பும் மனத்திலே உளைச்சலும் உண்டாக்கி இருந்தது. ஆனால் ஒரு மிடுக்கு, அதனுடன் இணைபிரியாத ஒரு குரூரம் கண்களில் தெரித்தன. மொத்தத்தில் முகம் மகா கோரமாக இருந்தது. இவையாவும் பார்த்த எடுப்பில் என் கண்களில் படவில்லை. கோபமும் வெறுப்பும் எனது வாயை அடைத்து விட்டன. நிதானப்படுத்திக் கொண்டு என் கோபாவேசத்தையெல்லாம்—என் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த எரிமலையை அவன் மீது திறந்துவிட்டேன்.

"ஏ, பிசாசே! என்னை நாட இன்னும் உனக்குத் தைரியமா? நீ கொன்று குவித்தவர்களின் ரத்த சாந்திக்கு உன்னையே அழிக்கவேண்டும்!" என்று ஏசினேன்.

"நீ இந்தமாதிரிப் பேசுவாய் என்றுதான் நான் எதிர் பார்த்தேன். நீ என்னைக் கொல்லவேண்டும் என்கிருய். உயிருடன் இப்படி விளையாட உனக்கு என்ன உரிமையுண்டு. என்னை ஒழுங்காக நடத்து, நானும் மனித வம்சத்தை மதித்து ஒழுங்காக நடத்துகிறேன். இல்லாவிட்டால் மரணத்தின் அதரம் சிவக்க அதற்கு ரத்தபானம் செய்விப்பேன்" என்ருன் அந்தப் பிரேத மனிதன்.

'நீ பேய் உனக்கு ஒரு நீதியா?" என்று அவன்மீது பாய்ந்தேன்.

அவன் லாவகமாக விலகித் தப்பித்துக் கொண்டு "பதருதே! "நான் சொல்லுவதைக் கேளு!" என்று ஆரம்பித்தான்.

"நான் இதுவரை பட்டது போதாதா? ஏன் இன்னும் என் துன்பத்தை வளர்க்கிருய்? வாழ்வு துன்பச் சுமைதான், இருந்தாலும் உயிரைக் காத்துக்கொள்ள நான் போராடியே தீருவேன். உன்னைவிட பலாட்டியனுக என்னை உற்பத்தி செய்திருக்கிருய் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். நீதான் என்னைப் பிறப்பித்தவன். உன்னுடைய ஆதாரம்போல உன் அன்புக்கும் பாத்திரமாகி வாழ ஆசைப் பட்டேன். அழிவுண்ட தேவதூதனுகச் சாத்தானுக அல்லாடும் பாக்கியம்தான் கிட்டியது. நான் சுற்றிப் பார்க்கும் இடங்களெல்லாம் மோக்ஷமாக இருக்கிறது. ஆனுல் அதில் எனக்குத்தான் இடமில்லை. நான் ஆதியில் நல்லவன் தான். துன்பம்தான் என்னைப்பேயாக்கியது என்னைச் சந்தோஷப்படுத்து. யோக்கியனுகிறேன். இந்தக் கொடும் பனிதான் எனக்குப் பரிவு காட்டுகிறது. உன்னுடைய மனித ஜாதி அல்ல. என் கதையைக் கேளு. அப்பொழுதாவது உன் மனம் மாறுகிறதா பார்ப்போம். இந்த இடத்துக் குளிரை உன் உடம்பு தாங்காது. வா, என் குடிசைக்கு வா" என்று அழைத்துச் சென்ருன்.

# பிரேத மனிதன் பட்ட துன்பம்

"**நா**ன் பிறந்தது முதல் கொஞ்சம் கொஞ்சமாகப் புலனறிவும் உலக நியதியின் போக்கும் அறிந்து கொண்டேன். ஆனால் காட்டில் அலைந்து திரிந்து கொண்டிருந்து வாழ்வைப் பாழாக்க விரும்பவில்லை. நெருப்பு உடம்புக்கு இதமான வெக்கையைக் கொடுக்கும் என்பதுடன், தொட்டால் துன்பம் தரும் என்பதை அனுபவத்தால் அறிந்தேன்.

ஒருநாள் குளிர்க் கடுமை தாங்க முடியாமல் காட்டு வழியே நடந்து கொண்டிருந்தேன். குடிசையொன்றைக் கண்டு அதற்குள் எட்டிப் பார்த்தேன். உள்ளே ஒரு கிழவன் உட்கார்ந்து வேலை செய்து கொண்டிருந்தான். அவனுடைய முகக்களை பரம நல்லவன்போலக் காட்டியது. நான் உள்ளே நுழைந்தேன். நுழைந்ததுதான் தாமதம் உளறியடித்து ஊளை யிட்டுக் கொண்டு ஓட்டமாக ஓடிவிட்டான். அவனுடைய உடலில் தென்பட்ட வலுவைவிட அவனுடைய ஓட்டம் அதிக தெம்பைக் காட்டியது. எனக்கு மனக்கஷ்டமாக இருந்தது ஆனால் பசி. குடிசையும் ரொம்ப சுத்தமாக இருந்தது. அகப்பட்டதைத் தின்றுவிட்டு அந்த இடத்தி லேயே கிடந்து உறங்கினேன்.

நான் மறுபடியும் விழித்துப் பார்த்தபோது சூரியன் உச்சி யிலிருந்தான். வெளியே சுகமாக இருந்தது. உற்சாகமாக வெளியேறி கால் சென்றபக்கமாக நடந்தேன். ஒரு கிராமம் வந்தது., வரிசை வரிசையாக எத்தனை வீடுகள்! பார்ப்பதற்கு எத்தனை நன்றாக இருந்தது. ஒரு பெரிய வீடு அங்கே

ஜனங்கள் போய் என்னென்னவோ வாங்கிக் கொண்டு வந்தார்கள். நானும் உள்ளே போனேன். போனதுதான் தாமதம், ஏக அமளியாகப் போய்விட்டது. குழந்தைகள் வீறிட்டுக் கத்தின. ஆண் பெண்கள் மயங்கி விழுந்தார்கள். ஊரே திரண்டுவந்து என்னை அடித்தது. அடியும் உதையும் தாங்கமாட்டாமல் ஒரே ஓட்டமாக ஓடித் தப்பித்துக் காட்டுக்குள் மறைந்தேன். அதற்கப்புறம் ஜனநடமாட்டமுள்ள இடம் என்றாலே எனக்குப் பயம். என்னைக் கண்டால் ஓடுகிறார்கள். பயப்படுகிறார்கள். துன்புறுத்துகிறார்கள்.

சங்கடம் தாங்கமுடியவில்லை. பழையபடி குளிரிலும் காட்டிலும் அடிபட்டேன். எங்கெங்கெல்லாம் திரிந்தேனோ; கடைசியாக ஜன நடமாட்டம் அவ்வளவு அதிகமாக இல்லாத ஒரு பகுதியில் ஒரு குடிசையும், அதன் சுவருடன் சுவராக ஒட்டிப் பாழடைந்த ஒரு தொழுவமும் இருந்தது. அந்தக் குடிசையில் ஒரு வாலிபனும் ஒரு கிழவனும் ஒரு பெண்ணும் வசித்து வந்தார்கள், கிழவனுக்குக் கண் குருடு. பெண் அழகி. வாலிபனும் அழகன்தான். அவன் முகத்திலே துயரத்தின் மாசு படிந்திருந்தது. இவர்களுடன் நெருங்கிப் பழக ஆசை. ஆனால் திடீரென்று சென்றால் காரியம் கெட்டுவிடும் என்று எனக்குத் தெரிந்த தந்திரத்தைச் செய்தேன். இரவில் அவர்கள் படுத்துக்கொண்டபிறகு அவர்கள் குடிலுக்குப் பின்னாலிருந்த தோட்டத்தில் விறகு கொண்டுவந்து போடுவேன். தொட்டியில் தண்ணீர் நிரப்பி வைத்து விடுவேன். முதலில் இந்தக் காரியங்களை யார் செய்கிறார்கள் என்பது அவர்களுக்கு அதிசயமாக இருந்தது. நற்குல தெய்வம் ஏதோ தங்களுக்கு வந்து உதவுவதாகப் பேசிக்கொள்வதைக் கேட்டு மனம் மகிழ்ந்தேன். அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கேட்டு உங்கள் பாஷையைக் கற்றுக்கொண்டேன். கிழவன் பெயர் டி - லெஸி, பெண்ணின் பெயர் அகேதா; அந்த வாலிபன் பெயர் பெலிக்ஸ். இவர்களை எப்படிப் பழக்கிக் கொள்வது, இதுவே எனக்கு பிரம பிரயத்தனமாக இருந்து வந்தது.

கிழவனும் ஒரு காலத்தில் நல்ல செயலில் இருந்து வந்தவன்தான். காலவித்தியாசத்தால் தங்கள் தேசமான பிரான்ஸை விட்டு இங்கு ஓடிவந்து காலம் கழிக்கிருர்கள். டி-லெஸி அங்கே பெரிய மனிதனும். அவனுடைய மகன் இந்த பெலிக்ஸ். இவன் வீட்டுக்கு வேண்டிய காரியங்களையும் தங்கையின் படிப்பையும் கவனித்து வருகிருன். அங்கேபாவனை வாழ்ந்தபோது ஒரு துருக்கியனுடைய மகளைக் காதலித்தான். அந்தத் துரோசத் துருக்கியன் தன் சௌகரியத்திற்கு வசதி செய்துகொள்ள இவர்கள் காதலை அனுமதிப்பவன்போல செய்தான். ஆனல் பெலிக்ஸ் தேசத் துரோகி, சதி செய்கிருன் என்ற பொய்களைப் போய்ச்சொல்லி, ஒரே நாளில் இவர்கள் குடும்பத்திற்கு ஆபத்தைக் கொண்டு வந்து விட்டுவிட்டான்.

இவர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நாட்டை விட்டு ஓடிவந்து இங்கு காலம் கழிக்கிருர்கள். இதையெல்லாம் அவர்கள் பேச்சிலிருந்து அறிந்தேன். இப்படிச் சிறிது நாட்கள் கழியு முன்னே, மட்டக்குதிரை ஒன்றின் பேரில் வழி விசாரித்துக் கொண்டு ஒரு பெண் வந்தாள். வீட்டுக்குள் இருந்த பெலிக்ஸ் வெளியே வந்தான். அவன் அப்பொழுது காதலித்த அரபுப் பெண்ணும். தகப்பனை ஏமாற்றிவிட்டு ஓடி வந்து விட்டாளாம். ஏற்கனவே இன்பம் மிகுந்த குடிசைக் குடும்பத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் தாண்டவமாடியது. இந்த அரபுப் பெண்ணுக்கு பெலிக்ஸ் தன் பாஷையையும், தேசவள முறைகளையும் முறையாகச் சொல்லிக் கொடுத்தாள். ஒண்டி நின்று கேட்டு அவ்வளவையும் நானும் கற்றுக் கொண்டேன்.

# நான் படித்த கதை

இதுதான் என் பக்கத்துக் குடிசையில் வசிக்கிறவர்களுடைய சரித்திரம்; அது என் மனதில் ரொம்பவும் ஆழமாகப் பதிந்தது. அவர்களுடைய நடை, நொடி பாவனைகள், அவர்களுடைய வாழ்வு இவையெல்லாம் மனித வம்சத்தின் தர்மா தர்ம விகல்பங்களை எல்லாம் எனக்கு அறிவித்தது.

அதர்மத்தை நான் இதுவரை எட்டாத் தொலையிலுள்ள ஏதோ ஒரு துன்பத்தின் சாகையாகவே கருதிவந்தேன். என் கண் முன்பே இதய பூர்வமான அன்பும் தாராளத் தன்மையும் தாண்டவமாடின, அந்தக் குளுமையில் நானும் ஒதுங்கி வாழவிரும்பினேன். எத்தனை நல்ல குணங்கள்! எத்தனை நல்ல தன்மைகள்! இவற்றிற்கெல்லாம் விளை நிலமாக அல்லவா இந்தத் தொடர்பு இருந்தது! ஆனல் நான் ஒன்று சொல்ல வேண்டும், எனக்கு அறிவு வளர ஆரம்பிக்குமுன், அதே வருஷம் ஆகஸ்டு மாதத்தில் நடந்த ஒரு காரியத்தை நான் சொல்லுவதற்கு மறந்து விடக்கூடாது.

ஒருநாள் ராத்திரி; வழக்கம்போல் அருகில் இருந்த காட்டிலே விறகு பொறுக்கச் சென்றேன். அங்கேதான் என் பசியைப் போக்கிக்கொள்ள ஏதோ, காய்கனி வகைகளை நான் சேகரிப்பது வழக்கம். போகிற வழியிலே ஒரு பெட்டி திறந்து கிடந்தது. அதிலே சில உடைகளும் கொஞ்சம் புஸ்தகங்களும் இருந்தன. அதிர்ஷ்ட வசமாக அந்தப் புஸ்தகங்களெல்லாம் நான் கற்றுக்கொண்ட பாஷையிலேயே இருந்தன. அவை வருமாறு; ஸ்வர்க்க நீக்கம். புளூட்டார்ச் எழுதிய ஜீவிய சரித்

திரம் வெர்டர் என்பவரின் துயரங்கள். இந்தப் புஸ்தகங்களை நான் பொக்கிஷங்களாகவே மதித்தேன். அவற்றை என் முழு கவனத்தையும் செலுத்திப் படித்தேன், என் சிந்தனையை அச்சரித்திரங்களின் பேரில் மிதக்கவிட்டு நீந்தினேன்.

இந்தப் புஸ்தகங்கள் என் மனசை எவ்வாறு மாற்றின என்பதை விவரிப்பது சாத்தியமற்ற காரியமாகும். அவை என் மனசில் அனந்தகோடி புதிய உருவங்களை, உணர்ச்சிகளை, சிற்சில சமயம் ஆனந்தத்தை, ஆனால் பெரும்பான்மையாக ஆழ்ந்த, ஆழங்காண முடியாத முடிவற்ற சோகத்தை உண்டாக்கி என்னைத் துயரத்தில் ஆழ்த்தியது. வெர்டரின் துயரங்கள் சாதாரணக் கதைதான். ஆனால் அதில் பலவிதமான எண்ணக் கலவைகள். இதுவரை தெளிவுபடாத பல விவகாரங்களில் புதிய அர்த்தபுஷ்டிகள் முதலியன பொதிந்து கிடந்தன. அதைப் படித்துப்படித்து பிரமித்துப்போனேன். சாதாரண வாழ்க்கை; ஆனால் சிகரந்தாவும் சிந்தனைகள், உணர்ச்சிகள்! அவையாவும் தன்னிலிருந்து வேறாகப் பிரிந்த புற விவகாரத்தை நாடித் தவிர்த்தது. ஏறக்குறைய நான் இந்தக் குடிசைக்கு அருகில் இருந்துகொண்டு அதில் வாழ்வோருடைய தொடர்புக்காகத் தவிப்பது, அந்த கதையில் நிகழும் விவகாரத்தைப் போன்றதாகவே இருந்தது. நான் இதுவரை கற்பனை செய்து எண்ணியதற்கெல்லாம் மேம்பாடான தெய்வாம்சத்தை வெர்டர் பெற்றிருந்தான் என்று தான் சொல்லவேண்டும். அவன் கபடியல்ல. அவனுடைய குணசம்பத்து ஆழ்ந்து வேர்விட்டிருந்தது. மரணம், தற்கொலை ஆகியவை பற்றி அவன் கொண்டிருந்த கருத்துக்கள் எல்லாம் என்னை பிரமிக்கவைத்தன. அவன் சொல்லுவது சரிதானா, அவனுடைய கட்சியில்தர்க்கம் பொருந்தியிருக்கிறதா என்பதை எல்லாம்பற்றி எனக்குச் சொல்லத் தெரியாது. சொல்லவும் முடியாது என்னைப் பொறுத்தவரை நான் வழிபட்ட வீரன் அவன். அவனுடைய அழிவுக்காக வருந்தி கண்ணீர் வடித்தேன், ஆனால் காரணம் மாத்திரம் எனக்குப் புரியவில்லை.

இன்னென்று நான் சொல்ல வேண்டும். நான் படித்த தெல்லாம் தத்பவமாகவே கற்றேன். அதாவது நான் படித்த புஸ்தகங்களில் நானும் ஒரு பாத்திரமாகவே ஊடாடித் திரிந்தேன். நான் படித்து வந்த புஸ்தகங்களில் எனக்குப் பரிச் சயமானவர்கள் என்போன்று துன்பம் அனுபவித்தவர்கள். அவர்களுடைய பேச்சு என் காதில் விழுந்தது. ஆனால் பூர்ணமாகப் புரியவில்லை. நான் பூர்ண பண்டிதனா, அவ்வள வையும் புரிந்துகொள்ள? எனக்கு உற்றார் உறவினர் கிடையாது. நான் கை பார்த்து ஜீவிக்கும்படியாக எஜமான னென்று எனக்கு ஒருவரும் கிடையாது. என் வழி சுதந்திர வழி. நான் அழிந்தால் அழுவதற்கு ஆள்கிடையாது. நானோ குரூபி, ஆகிருதியோ ராக்ஷஸத் தன்மை வாய்ந்திருந்தது. இதற்குப் பொருள் என்ன? நான் யார்? எதிலிருந்து நான் பிறந்தேன்? எங்கிருந்து நான் வந்தேன்? எங்கேதான் போகப் போகிறேன்? இம்மாதிரியான கேள்விகள் பல என் மனதை அடிக்கடி வாட்டின. ஆனால் அந்தப் புதிர்களைத் தீர்க்க எனக்கு வழி எதுவும் தென்படவில்லை.

புளோட்டார்ச் எழுதிய ஜீவிய சரித்திரங்கள் புராதன காலத்தில் குடியாட்சிகளை ஸ்தாபித்தவர்களின் வாழ்வை விவரித்தது. இந்தப் புஸ்தகம் என் மனசில் வேறுவிதமான பக்குவத்தைத் தந்தது. வெர்டர் எனக்கு துன்பத்தின் சாகையைக் கற்றுக்கொடுத்தார். புளோட்டார்ச் எனக்கு உயர்ந்த கருத்துக்களைக் காட்டினார். என்னுடைய நினைப்பு என்னும்பட்சி சிறகெடுத்துப்பறக்க அவன் உதவிபுரிந்தான். நான் படித்தவற்றில் பல என் பக்குவத்திற்கும் அனுபவத் திற்கும் அதீதமானவை. அகண்டாகாரமான ராஜ்யங்கள், விஸ்தாரமான பூப்பிரதேசங்கள், ஆற்றொழுக்குகள், எல்லை காண முடியாத சப்தஸாகரங்கள், என என் மனதிலே குழம்பித் திரிந்த கருத்துக்கள் குமைந்தன. பட்டணம் என்றாலோ மகா சபைகள் என்றாலோ மனிதக் கூட்ட மென்றாலோ என்ன வென்பது எனக்குத் தெரியாது. மனித குணத்தைக் கற்றுத் தெளிய நான் பெற்ற பாடசாலை அந்தக்

குடிசை வாழ் மனிதர்தாம். ஆனால் இந்தப் புஸ்தகமோ என் மனசிலே பிரமாதமான காட்சிகளை எழுப்பியது. மனித வம்சத்தை ஆண்டு வம்ச நாசத்துக்குத்துணை புரியும் கொலைத் தொழிலில் ஈடுபட்ட பெரிய மனிதர்களின் ஜீவிய சரித்திரத்தை நான் வாசித்தேன். தர்மாவேசம் என் மனசில் பொங்கியது. தீமையை வெறுத்தேன், அதாவது தீமை என்று நான் எதை நினைத்துக் கொண்டேனோ அதை வெறுத்தேன். தர்மமும் அதர்மமும் என்னைப் பொறுத்த வரை எனக்கு சுகத்தையோ அல்லது துன்பத்தையோ தந்தவை என்றுதான் நான் கருதினேன். இந்த ரீதியாக நான் சோதனை செய்தபோது, சமாதான முறையிலேயே சட்ட நிர்த்தாரணம் செய்த **நியூமா, ஸோலன், லைக்கர்கஸ்** முதலியோர் என் மனசுக்கு உகந்தவர்களாகத் தென்பட்டார்கள். ஆனால் **ரோமுலஸ், தீஸுயூஸ்,** முதலிய தர்ம ஸ்தாபகர்கள் என் மனசை அவ்வளவாகத் தொடவில்லை. என்னைப் பராமரித்து வந்த இந்தக் குடிசை வாசிகளின் தர்மானுஷ்டான முறை பிதாவழி-ாத்தியதையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஏற்பாடு. அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இதற்கு மாருக மனித வம்சத்தின் போக்கை ஒரு சிப்பாயின் மூலம் தெரிந்து கொண்டிருந்தேன், ஆனால்—அதாவது புகழ் வெறியும் கொலை வெறியும் பிடித்த ஒருவனுடைய அடிச்சுவட்டைப் பின்பற்ற நான் புரிந்து கொண்டிருந்தேனுனல் என்மனப் பக்குவம் வேறு மாதிரியில் அமைந்திருக்கும்.

ஆனால் சுவர்க்க நீக்கம் என்ற காவியம் என் மனசிலே வேறொரு மாதிரியான ஆழ்ந்த உணர்ச்சிகளை எழுப்பியது. என் கையில் கிடைத்த மற்ற புஸ்தகங்களைப் போல இதுவும் உண்மையான சரித்திரம் என்ற பரம நம்பிக்கையுடனேயே இதையும் வாசித்தேன். சர்வ வல்லமையுள்ள தெய்வம் தான் பிறப்பித்த ராசிகளுடன் போர் புரிந்து வருகிருர் என்ற கருத்து என் மனசிலே பீதியுடன் கூடிய மலைப்பையும் ஆச்சரியத்தையும் தூண்டியது, அதிலே பல கட்டங்கள் என்னுடைய ஜீவி

யத்தைக் கொண்டதாகவே இருக்கிறது, ஆதாமைப் போல நானும் இந்த உலகத்தில் வேறு எந்த ஜீவராசிகளுடனும் தொடர்பு கொண்டவனல்ல போலும், ஆனால் அவனுடைய நிலை என்னுடையதற்கு முற்றிலும் மாறாக இருந்தது. அவன், கடவுளின் கரங்களிலிருந்து வந்த பொழுது பூர்ண வடிவம் படைத்து மகிழ்ச்சியும் சுபிக்ஷமும் பெற்ற ஒருவனாக கடவுளின் பராமரிப்பிலே பாதுகாப்பிலே வாழ்ந்து வந்தான். தனக்கும் மேம்பாடுடைய ஒரு தேஜஸ்வியுடன் நேருக்கு நேராகப் பேச மனிதனுக்கு அப்பொழுது சவுகரியம் வாய்த்திருந்தது; ஆனால் நானோ தன்னந்தனியாக நிர்க்கதியாக துன்பத்தில் நெளிந்தேன். சாத்தான் தான் என்னுடைய நிலைமையை பூர்ணமாக காட்டுவதற்கு லாயக்கு உள்ளவன் என்று பலமுறை நான் நினைத்தது உண்டு. ஏனென்றால் என்னைப் பாதுகாத்து வருவோருடைய உல்லாசத்தை காணுந்தோறும் என் மனசிலே பொறாமைத் தீ சுடர் விட்டு எரியும்.

இன்னொரு சந்தர்ப்பமும் இந்த மனப்போக்குகளுக்கு பக்க பலமாக அமைந்து அதை உறுதிப்படுத்தியது. நான் இந்த குடிசைக்கு வந்தபிறகு உன்னுடைய ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து எடுத்துவந்த சட்டையிலுள்ள பை ஒன்றில் சில கடுதாசிகள் இருந்தது கண்டேன். முதலில் நான் அதைப்பற்றி அவ்வளவு சிரத்தை கொள்ளவில்லை. ஆனால் இப்பொழுது எழுத்து வாசனை வந்து விட்டதனால் அதில் என்ன எழுதியிருக்கிறது என்பதை கவனமாகப் படித்தேன். நீ என்னைப் பிறப்பிப்பதற்கு முன் அந்த தேதி வரை நான்கு மாதங்கள் நீ எழுதி வைத்த குறிப்புக்கள் அவை. நீ உன் வேலையை எப்படி எல்லாம் முயன்று படிப்படியாக பலனைப் பெற்று முயற்சியில் அபிவிருத்தி அடைந்தாய் என்பதை வெகு நுணுக்கமாகவும் விவரமாகவும் அதில் கண்டிருந்தது. தவிரவும் உன் குடும்பத்தில் நிகழ்ந்த சம்பவங்களையும் அதனோடு சேர்த்து எழுதியிருந்தாய். உனக்கு இந்தக் கடுதாசிகளைப் பற்றி ஞாபகம் இருக்கும் என்று எண்ணுகிறேன். இதோ இருக்கிறது அந்த கடுதாசிக் குப்பை. அதில் கண்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் இந்தப்பாப

ஜன்மத்தின் பிறப்பையே குறிக்கிறது. அருவறுப்பான இந்த விவகாரங்கள் எல்லாம் படம் பிடித்துக் காட்டுவது மாதிரி அதில் கோவை செய்யப்பட்டிருக்கிறது. என்னுடைய அழுக் குடம்பின் ஒவ்வொரு பாகமும் வெகு நுணுக்கமாக விவரிக்கப் பட்டிருப்பதோடு அதைக் கண்டு நீ வெகுண்டதும், கொலை நடுக்கம் கொண்டதும், தெளிவான பாஷையிலே பதிவாகி, என் மனசிலும் பதிவாகி விட்டது. அதை வாசிக்கும் போது எனக்குக் குமட்டல் எடுத்தது. நான் உயிர் பெற்ற நாளை நினைக்க நினைக்க எனக்கு எவ்வளவு மன உளைச்சலாக இருக் கிறது. பாபத்தின் சாயை விழுந்த என் பிரம்மாவே! நீயே வெறுக்கும் இந்தக் கோர ரூபத்தை எனக்கு ஏன் கொடுத்தாய்? தெய்வம் தன் தயாள சிந்தையினால் அழகும் ஆசை எழுப்பும் சக்தியும் உள்ள தனது வடிவத்தையே மனிதனுக்கு அளித்தார். ஆனால் நீயோ எனக்குக் கொடுத்த வடிவம் உன் வர்க்கத்திலே மிகவும் ஆபாசமான ரகம். ஒற்றுமையோ அதன் தன்மையோ இன்னும் பன்மடங்கு பெருகிய விகாரத்தோடு காணப்படு கிறது. சாத்தான்கூட தன் பரிவாரத்துடன் தன்னைப் பாராட் டும் பேய்க் கும்பலுடன் உத்ஸாகமாக வாழ்கிறான். நானோ தனிமையிலே சகலருடைய வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டு அல்லாடுகிறேன்.

எனது மனசு தொய்ந்து விட்டபோதெல்லாம் இம் மாதிரியே நினைத்து நினைத்து துன்புற்றேன். ஆனால் பக்கத்து குடிசையில் வாழும் மனிதராசிகளின் மனப் போக்குகளையும் விவகாரங்களையும் கவனிக்கும்போது, அவர்களோடு பழகினால் என்ன, எனது குரூபத்தைக் கண்டாவது இரங்க மாட்டார்களா என்று நினைத்தேன். எவ்வளவுதான் நான் பயங்கரமாகவும் பிரம்மாண்டமாகவும் இருந்தபோதிலும் அவர்களுடைய நேசத் தையும் இரக்கத்தையும் நாடிவரும் ஒருவனை கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளி விடுவார்களா? அவர்களைச் சந்திப்பதற்கு நான் என்னை தகுதிப்படுத்திக் கொள்ளும்வரை மனதைத் தளர விடக்கூடாதென்ற உறுதி கொண்டேன். அவர்களை நான் சந்திப்பதுதான், என் விதி எவ்வாறு முடியும் என்பதை நிர்ண

யிக்கும் ஒரு விவகாரமாகும். ஆகையால் அதில் நான் எனது பயங்கொள்ளித்தனத்தினுலோ, வேறு எந்தக் காரணத்தினுலோ தோற்றுவிடக் கூடாதென்று தீர்மானமாக விரும்பியதால் இன்னும் சில மாதங்கள்வரை மறைவிலேயே நடமாடுவோம் என்று தீர்மானித்தேன்.

இவர்களுடன் பழகுவதெப்படி? பெலிக்ஸும் பெண்களும் கிழவனை மாத்திரம் குடிசையில் தனியாக விட்டு விட்டுப் போகும் வழக்கம் உண்டு. அந்தச் சமயத்தை நாடி கிழவனுடைய சினேகத்தைப் பிடித்தால் என்ன என்று எண்ணினேன். ஒரு நாள் வசதி வாய்த்தது. நான் குடிசைக் குள் புகுந்தேன். "யாரது" என்ருன் கிழவன்.

"அன்னியன். அகதி. அன்பு கிடைக்காமல் தவிக்கி றேன்" என்றேன்.

அவன் ஆறுதல் சொன்ஞன். நானும் அவன் பேச்சி லேயே பரவசமானேன். இங்கே என் நண்பர்களின் இதயத் திற்குள் குடிபுக ஒரு பொய் சொன்னேன்.

"என்னை ஒரு பிரஞ்சுக் குடும்பம் போஷித்து வளர்த்தது. ஏது காரணத்தினுலோ அவர்கள் வெறுப்புக்குப் பாத்திரமா னேன். நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. மீண்டும் அவர் களது நட்பைப்பெற ஆசைப்பட்டு முயன்றேன். முடியவில்லை. நீர்தான் அவர்களைச் சமாதானப்படுத்தி திருப்தி செய்ய வேண்டும். எனக்காகப் பேசுவோர் யாரும் கிடையாது. நான் அகதி!" என்றேன்.

கிழவன் வாஸ்தவத்திலேயே நல்லவன். "பயப்படாதே அப்பா! சமாதானப்படுத்துகிறேன் நான். நீ உண்மையிலேயே தப்புக்காரியம் செய்திருந்தாயானுல்கூட பரவா இல்லை. பாவ மன்னிப்பு உண்டு. அதிருக்கட்டும். நீ குறிப்பிடுவது யார். இனம் தெரிந்தால்தானே நான் பேச முடியும்?" என்ருன்.

நான் என்ன சொல்லுவது. எந்தமாதிரி பதில் சொல்லுவது? ஒன்றும் சொல்லத் தெரியாமல் நான் அவனுடைய காலேக் கட்டிக்கொண்டு அழுதேன். அந்தச்சமயத்தில் வெளியில் சென்றிருந்தவர்கள் வந்துவிட்டார்கள், "என்னைக் காப்பாற்றுங்கள். இதோ வந்துவிட்டார்கள். நான் நாடுவது உம்மையும் உமது குடும்பத்தையுமேதான். இந்தச்சமயத்தில் என்னைக் கைவிடாதீர்!" என்று அலறினேன்.

"அட தெய்வமே! நீ யாரப்பா!" என்ருன் கிழவன்.

அச்சமயம் பெலிக்ஸும் பெண்களும் குடிசைக்குள் நுழைந்தார்கள். அகேதா மயங்கி விழுந்தாள். அந்த அரபுக் காதலி பீதியடித்துப்போய் வெளியே ஓடிப்போனுள். பெலிக்ஸ் என் மீது பாய்ந்து என்னைத் தடியால் அடித்தான். அவனை சிம்பு சிம்பாக கிழித்துவிட வேண்டுமென்று கோபம் வந்தது. அவன் மீண்டும் தடியை ஓங்கினுன். நான் ஓடிவந்து விட்டேன்.

மன உளைச்சல் சகிக்க முடியவில்லை; காட்டிலே அலைந்து திரிந்தேன். துன்பம் தாங்கமாட்டாமல் ஊளையிட்டு அலறினேன், வெந்த மனசை அழுது அழுது ஆற்ற முயன்றேன். உலகத்து அமைதி என்னைக் கேலி செய்வதுபோல் இருந்தது. என்னை சிருஷ்டித்த நாசகாலா என் உயிர் தோன்றியவுடன் என்னை ஏன் நான் அழித்துக்கொள்ளவில்லை. குடிசையையும் அதில் வசிப்பவர்களையும் எரித்து சாம்பலாக்க என் மனம் தவித்தது. மறுநாள் விடிந்ததும் பதுங்கிப்பதுங்கிச் சென்றேன். பெலிக்ஸ் அந்தப் பிராந்தியத்தை விட்டே வெளியேறிவிடத் தீர்மானித்து விட்டான் என்பதைத் தெரிந்து கொண்டேன். குடிசைக்கு உடமஸ்தனிடம் அங்கே வாழ முடியாது என்று கூறி நடந்ததை விவரித்துக்கொண்டிருந்தான். அதற்கப்புறம் அந்தத் திசையிலேயே நான் செல்லவில்லை. எல்லோரையும் கொன்று அழிக்கவேண்டுமென்றுதான் என் மனம் நாடியது. ஆனுல் அவர்களைக் கொல்ல மனம் வரவில்லை. குடிசையையும்

காட்டையும் கொளுத்திக் கூத்தாடினேன். நீ பிறந்த ஊர் ஜெனிவா என்று தெரிந்துகொண்டு உன்னைப் பார்க்க வருவது என்று தீர்மானித்தேன். நான் கற்றது வீண் போகவில்லை. சொல்லமுடியாத சங்கடங்களை அனுபவித்தேன். கடைசியாக அந்தப் பக்கமாக வந்தேன்.

நான் பகலில் நடமாடுவது கிடையாது. இருட்டில்தான் பிரயாணம் செய்வேன். நல்ல வசந்தம். ஸைப்ரஸ் மரத் தடியில் நான் மறைவாக உட்கார்ந்திருந்தபோது மனிதக் குரல் கேட்டது. நான் மறைந்திருந்த இடத்தருகில் சிரித்துக் கொண்டே ஒரு பெண் குழந்தை ஓடி வந்தது. விளையாட்டுக் காக யாரிடமிருந்தோ ஓடி வந்ததுபோலும். பக்கத்தில் பிரவாக மாக ஓடிய நதியின் செங்குத்தான கரைமீது ஓடும்போது கால் தடுமாறி ஆற்றுக்குள் விழுந்தது. நான் மறைவிலிருந்து ஓடிவந்தேன். ஆற்றில் வேகம் ஜாஸ்தி. ரொம்பக் கஷ்டப் பட்டு குழந்தையை கரையில் எடுத்துப்போட்டேன். அது பிரக்ஞை இழந்துவிட்டது. திடீரென்று என் முயற்சிக் கிடையே ஒரு பட்டிக்காட்டான் வந்தான். அவனிடமிருந்து தான் அந்தக்குழந்தை ஓடிவந்திருக்கவேண்டும். குழந்தையை என்னிடமிருந்து பிடிங்கிக்கொண்டு துப்பாக்கியால் சுட்டு விட்டான். நான் மண்ணில் விழுந்து விட்டேன். அவன் வெகு வேகமாகக் காட்டுக்குள் ஓடிவிட்டான். நன்றி செய்த தற்குப் பலன்! வலி தாங்க முடியாமல் துடித்தேன், சத்த மிட்டேன். மனிதப் பூண்டையே அழித்துவிடுவது என்று சங்கல்பம் செய்துகொண்டேன். குண்டு என் தோள்பட்டை யில் பாய்ந்து தொளைத்தது. அது உள்ளே இருக்கிறதா, வெளி யில் போய்விட்டதா என்பது தெரியாது. எடுக்கவும் மார்க்கம் தெரியவில்லை. வலி பெருகப் பெருக மனிதக் கும்பல்மீது வஞ் சம் தீர்ப்பதிலேயே மனம் விழுந்துகொண்டிருந்தது. சில வாரங்களில் எப்படியோ காயம் ஆறி விட்டது. சூரியனும் காற்றும் கூட என் மனசுக்கு இன்பமூட்டவில்லை.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு மெள்ள மெள்ள ஜெனி வாவுக்கு வந்துசேர்ந்துவிட்டேன். சோர்வும் பசியும் பிடுங்கித்

தின்றது. ஜீரோ சிகரத்துக்கருகே சூரியாஸ்தமனம்கூட என் மனதுக்கு மகிழ்ச்சியை ஊட்டவில்லே.

தூக்கம் சற்று பசியைப் போக்கியது. ஆனுல் ஒரு சிறு குழந்தையின் வருகை என் துக்கத்தைக் கலேத்தது. சிறு பையன், விளேயாட்டுப் போக்கில் நான் இருந்த இடத்துக்கு வந்துவிட்டான். திடீரென்று என் மனசில் ஒரு நினேப்பு வந்தது. 'இவன் அறியாச் சிறுவன். குரூபம் அழகு என்ற பேதா பேத உணர்ச்சி இவன் மனசில் ஊறி இருக்காது. இவனேப் பிடித்து வைத்துக்கொண்டு என் நண்பனுகப் பழகிக் கொண்டால் நான் உலகில் தன்னந் தனியாக அலேய வேண் டியதில்லே அல்லவா?'

அந்தக் குழந்தையை எட்டிப்பிடித்தேன். அது முகத்தை மூடிக்கொண்டு வீறிட்டுக் கத்தியது. "ஏன் குழந்தாய் அழு கிருய். நான் உன்னே ஒன்றும் செய்யமாட்டேன்!" என்றேன்.

ஆனுல் அது என் கைப்பிடிப்பை விட்டுத் திமிறியது.

"பூதம்! என்னே விட்டுவிடு, எங்கப்பாகிட்டே சொல்லி விடுவேன்" என்றது குழந்தை.

"பையா, இனிமேல் நீ உங்கப்பாவைப் பார்க்கமாட்டாய், என்கூட வரவேண்டும்" என்றேன்.

"பூதம், உன்னே எங்கப்பாகிட்ட சொல்லி அடிப்பேன். எங்கப்பா பிராங்கன்ஸ்டீனுக்கும். ஸின்டிக் ஆக்கும். உன்னே ஜெயிலில் போடுவார். என்னே விட்டுவிடு" என்றது குழந்தை.

"பிராங்கன்ஸ்டீனு, நீ என் பரம விரோதியின் குழந்தை. என் முதல் பலி" என்று அதன் கழுத்தைப் பிடித்தேன். செத்து விட்டது. என் பலியைப் பார்த்ததும் நானும் உலகில் ஹதம் செய்யும் வலிமை பூண்டிருக்கிறேன் என்று ஆனந்தப் பட்டேன்.

குழந்தையின் கழுத்தில் ஒரு சங்கிலியில் ஒரு சிறு படம் தொங்கியது. அதைப் பார்த்தேன். சொல்ல முடியாத அழகு. இந்த மாதிரி அழகிகளை ஏறிட்டுப் பார்க்கவும் முடியாதபடியல்லவா லபித்து விட்டது. எனக்குக் கோபம் கரைபுரண்டு பொங்கியது.

கோப எக்களிப்பிலே நான் கொலை நடத்திய இடத்தை விட்டுப் புறப்பட்டுப் போனேன். எங்கே சென்றேன். எங்கு போவது என்ற ஒரு வக்கு இருந்தால்தானே. கால் போனபடி சென்று ஒரு தொழுவத்திற்குள் புகுந்தேன். அங்கே வைக்கோல் மீது ஒருத்தி தூங்கிக்கொண்டிருந்தாள். படத்தில் பார்த்தவளைப் பால அவ்வளவு அழகியல்ல. ஆனல் நல்ல வாலிபக் களை; அவளுடைய புன்சிரிப்பு என்னைத்தவிர மற்றவருக்குத்தான். "உன் காதலன் வந்துவிட்டான், எழுந்திரு!" என்று நான் காதோடு காதாக உச்சரித்தேன். அவள் தூக்கத்தில் புரண்டு படுத்தாள். எங்கே எழுந்து விடுவாளோ என்ற பயம் அவளை எழுப்புவதைப்போன்ற வெறித்தனம்வேறென்றுமில்லை. என் மனப்பேய் அவள்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் தவித்தது. அவள் எனக்கல்லவே. பெலிக்ஸ் மனித கும்பலின் சதி வேலைகளை வர்ணிப்பதை ஒண்டி நின்று கேட்டிருக்கிறேன். அவளுக்குத் தண்டனை கிடைக்கட்டும்! அந்தச் சங்கிலியையும் படத்தையும் அவளுடைய உடையில் மறைத்துவிட்டு நடந்தேன்.

அந்த இடத்தில் அடிக்கடி வந்து போவேன் நீ வருவாய் என்ற நினைப்பு. ஆனல் உலகை விட்டே ஓடிவிடவும் ஆசை. கடைசியாக இந்தப் பனிச் சிகரங்களில் வந்து தஞ்சம் புகுந்தேன்.

நான் தனிமையாய் நின்று தவிக்கிறேன். என்னைப்போல ஒரு பெண்ணை உண்டு பண்ணித் தந்து விடு. என்னைப் போன்ற ஒரு குரூபி என்னை மறுக்க மாட்டாள். எனக்குக் கிடைக்கும் சகா என் ஜாதியில் என் ஊனங்களுடன் இருக்க வேண்டும். உண்டு பண்ணித்தருவது உன் கடமை!" பிரேத மனிதன் பேசி முடித்தான்.

# பிரதிக்ஞை

---

பிரேத மனிதன் பேசி முடித்தான். நான் ஏதாவது பதில் சொல்வேன் என்று எதிர்பார்த்தான். ஆனால் என் மனம் குழம்பி விட்டது. கருத்துக்கள் உருமாறிச் சிதைந்து அவனது வேட்கையின் பூரண சரித்திரத்தை புலப்படுத்தத் தவறியது. அவன் வற்புறுத்தினான் :-

"நீ எனக்காக இன்னும் ஒரு பெண் பிறவி சிருஷ்டித்துத் தரவேண்டும், அது என் ஜீவியத்துக்கு அவசியம். இது உன்னால்தான் செய்து தரமுடியும். இம்மாதிரி கேட்க எனக்கு உரிமையுண்டு, இதற்கு நீ இணங்கித்தான் ஆகவேண்டும்."

"என்னால் முடியவே முடியாது. நீ என்னை என்ன மாதிரி சித்திரவதை செய்தாலும் அதற்கு இணங்கப்போவதில்லை. இந்த லோகத்திலேயே என்னைப்போல துன்பத்துக்கு உள்ளானவனைக்காண முடியாது, என்று சொல்லும்படி அவ்வளவு அல்லல்களையும் வேண்டுமானால் என்மீது சுமத்திவிடு. ஆனால் என்னை எனக்கே கேவலமாக ஆக்கிக்கொள்ள நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன்.

"இன்னும் ஒரு கோரத்தை உண்டு பண்ணி உன்னுடைய கூட்டு ஆதிக்கங்களுக்கு உலகை ஆட்படுத்த மாட்டேன். என் முன்னால் நிற்காதே. போய்விடு. போ, போ. என்னைச் சித்திரவதை செய்தாலும் இதற்கு இணங்க வைக்க முடியாது" என்று கொதித்தேன் நான்.

"நீ சொல்லுவது பிசகு. அதற்காக நான் உன்மீது கோபிக்கப் போவதில்லை. உன்னை மிரட்டிக் கொண்டிராமல்

வாதித்து இணங்க வைக்கப்போகிறேன். நான் பட்ட துன்பம் தான் என்னை இந்த மாதிரி குரூரமாக்கிவிட்டது. மனித வர்க்கம் என்னைக் காண வெறுத்து விரட்ட வில்லையா? என்னை சிருஷ்டித்த நீயே என்னைச் சிம்பு சிப்பாகப்பிய்த்தெறிய விரும்ப வில்லையா? சற்று எல்லாவற்றையும் ஞாபகப்படுத்திப் பார்த்துச் சொல்லு. என்மீது இரங்காத மனிதக் கும்பல் மீது நான் ஏன் இரங்கவேண்டும். என்னை இந்தப் பனிச்சகதிக்குள் தள்ளி, நீ உண்டு பண்ணின இந்த உடல் கூட்டை அழிந்து போகும்படி செய்தால் கொலை என்று சொல்ல மாட்டாயா? என்னைக் கொல்லும் மனிதனை நான் ஏன் மதிக்க வேண்டும்? கொடுமைக்குப் பதிலாக பரிவைக் காட்டட்டும். நானும் அப்படியே நடந்து கொள்கிறேன். என்றால் அன்பை எழுப்ப முடியாது போனால் பயத்தை ஏற்படுத்துவேன். மனித வர்க்கத்தின் பரம விரோதி நீதான்! என்னை பிறப்பித்து இந்தக் கொடுமைகளை எல்லாம் அனுபவிக்கும்படி செய்தாய். ஜாக்கிரதை! நான் நாசத்தில் இறங்குவேன். உன் நெஞ்சில் புழுதியும் சாம்பலும் குவியும்படி அழித்து வருவேன், பிறந்த நேரத்தையே நொந்து கொள்ளும் படிச் செய்து விடுவேன்......''

அவன் மனசைப் பேய்க் கோபம் சூறையாடியது. முகம் கோரமாக நெளிந்து நெறிந்தது. தன்னை அடக்கிக் கொண்டு மேலும் பேசினான்.

“உன்னோடு வாதிக்க விரும்பினேன். கோபம் என்னைக் கொல்லுகிறது. இதற்கெல்லாம் காரணம் **நீ தான்** என்பதை நீ உணர மறுப்பதுதான் என்னைக் கோபப்படுத்துகிறது. என்னிடம் சிறிது அன்பு காட்டினால் நூறு மடங்கு ஆயிரமடங்காக பரிந்து நடப்பேன். நான் கோரும் அந்தப் புதிய உருவுக்காக உலகத்துடன் நிரந்தர சமாதானம் செய்து கொள்வேன். நான் பிரமாதமாக எதையும் கேட்கவில்லை. என்னைப்போல் விகார மான பெண்ணுருவம் ஒன்றைச் செய்து தா என்றுதான் கேட்கிறேன். நான் கேட்பது அற்பமானது. அதுதான் கிடைக்கும். அது போதும். நாங்கள் பைசாசம் போல தனித்தே வாழ

வேண்டியிருக்கும். அதனுலேயே எங்களிடை அன்பு அதிகமாக இருக்கும். என்னுடைய சிருஷ்டிகர்த்தனே! சற்றே இரங்கு...''

என் மனம் இளகியது. அதை என் முகக்குறியில் கண்டுகொண்டான்.

''நீ இதற்குச் சம்மதித்தால் மனிதர் காணுத இடத்துக்கு நாங்கள் ஒதுங்கிப்போய் விடுகிறோம். தென் அமெரிக்க கானகங்களில் மறைந்து ஒதுங்கி வாழ்வோம். எங்கள் உணவு மனிதருடையது மாதிரி அல்ல. கொன்று தின்னும் விருப்பம் கிடையாது. பழமும் வித்தும் எங்கள் பசியைப் போக்கும். எங்களுக்கு உலர்ந்த சருகுப் படுக்கைபோதும்.......''

''உனக்கு மனித சகவாசத்தில்தானே ஆசை என்கிருய். அப்படியானுல் ஒதுங்கி வாழ எவ்வாறு சம்மதிப்பாய். ஆசையை விடு, அகன்று போ'' என்றேன்.

'' க்ஷணப்பித்தாக இருக்கிறதே உன் குணம். நான்தான் காலில் விழுந்து கெஞ்சுகிறேனே. உன் மனசு இளகவில்லையா ?...''

வெகுநேரம் யோசித்தேன். பிறகு ''நான் பெண் உருவம் ஒன்று செய்து கொடுத்ததும் ஐரோப்பாவை விட்டுப் போய் விடுகிறேன். திரும்பி வரமாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்தால் நான் உன் விருப்பத்துக்கு சம்மதிக்கிறேன்'' என்றேன்.

'' நீல வானத்தின் மீது தோன்றும் சூரியன் மீது ஆணை. என் நெஞ்சில் குடிகொண்டுள்ள அன்பின்மீது ஆணை. எனது பிரார்த்தனைக்கு நீ இணங்கினுல் நான் இந்த திசையிலேயே இருக்கமாட்டேன். நேராக வீட்டுக்குப் போய் உன் வேலையை ஆரம்பம் செய். ரொம்பவும் கவலையுடன் உன் முயற்சியைக் கவனித்து வருவேன். பயப்படாதே, தயாரானதும் நான் உன்னிடம் வருகிறேன்....''

இப்படிச் சொல்லிவிட்டு வெடுக்கென்று என்னைவிட்டு அகன்று விட்டான். என்ன வேகம். கருடப் பாய்ச்சலில் சென்று குன்றின் சரிவில் மறைந்துவிட்டான்.

அவனுடைய சரிதம் சொல்லி முடியு முன் சூரியனும் அஸ்தமனமாயிற்று. நான் வேகமாகத் திரும்பிப் போகாமல் போனுல் இருட்டில் அகப்பட்டுக் கொள்வேன் என்பது தெரியும். ஆனுல் என் மனச் சுமை தாளமுடியவில்லை. நடையும் அதற்கேற்பத் தள்ளாடியது. பாதிவழி வருமுன் நன்ருக இருட்டிவிட்டது ஓரிடத்தில் உட்கார்ந்து விட்டேன். மேலே தாரகைகள் கண் சிமிட்டின. எதிரே பைன் மரங்கள் பார்வையை மதில்போல் மறைத்தன. விழுந்து கிடந்த கட்டை ஒன்றின்மேல் உட்கார்ந்து விட்டேன். எங்கு பார்த்தாலும் அமைதி. ஆனுல் என் மனசில் மட்டும் எரிமலை. நட்சத்திரங்கள் என்னைப் பார்த்துக் கேலி செய்வது போலிருந்தது. "என் மீது இரக்க மிருந்தால் நினைவைப் போக்கிவிடு! என்னை ஒன்றுமில்லாமல் அடித்துவிடு. இல்லாவிட்டால் அகன்றுவிடு! என்று கதறினேன்.

காலையில் சாமௌனி கிராமத்திற்கு வந்து சேர்ந்தேன். அங்கிருந்து ஜெனிவாவுக்கு உடனே வந்துவிட்டேன்.

நாட்கள் ஓடி வாரங்களாயின. என் வேலையைத் தொடங்க எனக்குத் தைரியம் வரவில்லை. ஆனுல் பிரேத மனிதன் வஞ்சத்தின் மீது பயமோ சொல்லி முடியாது. பெண் உரு செய்வதென்ருல் பல மாதங்கள் ஊன்றிப்படித்து உழைக்க வேண்டும். தகப்பனுரிடம் இங்கிலாந்துக்குப் போய் வர அனுமதி பெற்று போக்குக்காட்டி விட்டு வேலையை முடித்துவிடலாம் என்று நினைத்தேன். வாக்குறுதி கொடுத்து விட்டதால் மனம் வேறு அல்லாடியது. ஆனுல் காலம் கடத்துவதில் ஒரு போலி நிம்மதி. தேகம் முன்போல் வலுவடைந்து விட்டது. என் தகப்பனுரும் இதைக் கவனித்தார். ஆனுல் அடிக்கடி வானம் கறுப்பதுபோல மனம் கறுக்கும். அப்பொழுதெல்லாம் தனிமையை நாடி விடுவேன்.

ஒருநாள் தகப்பனுர் என்னை நெருங்கி கலியாணப் பேச்சை எடுத்தார். தமக்கு மூப்பு அதிகமாகி விட்டதென்றும் எலிஸபெத்துடன் நான் குடித்தனம் நடத்துவதைப் பார்க்க ஆசை எனவும் சொன்னுர்.

நானும் கலியாணத்துக்கு ஆமோதித்தேன். ஆனல் கொஞ்சநாள் அவகாசம் வேண்டும் என்று கேட்டேன். என் வேலைக்கு இங்கிலாந்தில் உள்ள சில பண்டிதர்களிடம் அவர்களுடைய ஆராய்ச்சியைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டியிருந்தது. அல்லது கடிதப்போக்குவரத்து நடத்தவேண்டியிருந்தது. பிரேதமனிதனுக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்றி விட்டால் பிறகு நிம்மதியாகக் கலியாணம் செய்துகொண்டு வாழ்நாளைக் கழிக்கலாம் என்று எண்ணினேன்.

அவரிடமிருந்து இங்கிலாந்துக்குச் சென்று வர அனுமதி கிடைத்தது. சௌகரியம்போலத் திரும்பி வா என்றும் சொன்னுர். ஆனல் என்னிடம் சொல்லாமல் எலிஸபெத்தும் அவரும் கூடி யோசித்து ஸ்டிராஸ்பர்க்கிலிருந்து கிளேர்வெலே என்னுடன் துணைக்கு அனுப்புவது என்றும் தீர்மானித்து விட்டார்கள். நான் விரும்பியது எல்லாம் தனித்து யாத்திரை செய்வதேயாகும். அப்பொழுதுதான் என் வேலைக்குக் குந்தகமேற்படாது. ஆனல் போகும்போது ஆரம்பத்தில் அவன் இருந்தால் தனிமைத் துன்பம் அவ்வளவு இருக்காது. எனக்கும் என் எதிரிக்குமிடையில் மதிலாகவும் அவன் நிற்பான்.

செப்டம்பர் மாதம் புறப்பட்டேன். ஸ்டிராஸ்பார்க்கில் இரண்டு நாள் தங்கினேன். கிளர்வெல் வந்தான். ஸ்டிராஸ்பார்க்கில் படகு பிடித்து ராட்டர்டாம் வந்து அங்கிருந்து லண்டனுக்கு கப்பல் ஏறுவது என்று ஏற்பாடு. மான்ஹீமில் ஒரு நாள் தங்கினேம். ஐந்தாவது நாள் மெயன்ஸுக்கு வந்தோம். வழி நெடுக பல ஊர்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு ராட்டர்டாமில் வந்து கப்பலேறி லண்டனுக்கு வந்து சேர்ந்தோம்.

கிளர்வெலுக்கு இந்தியாவுக்குப் போக வேண்டுமென்று ஆசை. இங்கிலாந்தில்தான் அதற்கு ஏற்பாடு செய்து கொள் வதற்குச் சவுகரியம் என்று அவன் அதைச் செய்து வந்தான். லண்டனுக்கு வந்த சில மாதங்கள் கழித்து எடின்பரோவி லிருந்து ஒரு அழைப்பு வந்தது. அழைப்பு அனுப்பிய நண்பர் எங்கள் வீட்டுக்கு அதிதியாக வந்திருந்தவர். கிளேர்வெலுக்கு அங்கே போக ஆசை நானும் சம்மதித்துப் புறப்பட்டேன். வழியில் இங்கிலாந்தில் பார்க்க வேண்டிய விசேஷங்களை எல்லாம் பார்த்துக் கொண்டு போனோம். எடின்பரோவில் ஒரு வாரம் தங்கி விட்டு எங்களை எதிர்பார்த்த நண்பர் காத்திருந்த இடத்துக்கு வந்தோம். ஸ்காட்லாந்தைத் தன்னந்தனியாகச் சுற்றிப் பார்க்க ஆசை. ‘இரண்டொரு மாதத்தில் திரும்பி விடு வேன். நீ இங்கேயே இரு'' என்றேன்.

கிளர்வெல் தடுத்துப் பார்த்தான். என் உறுதியைக் கண்டு பேசாதிருந்து விட்டான்.

# மீண்டும் பிரம்மா உத்யோகம்

நண்பனை விட்டுப் பிரிந்து ஸ்காட்லந்தில் நிர்மானுஷ்யமான ஓர் இடத்திற்குப் போய் என் வேலையைச் செய்து முடிக்கத் தீர்மானித்தேன். ஆர்க்கினி தீவுகளில் ரொம்பவும் தொலைவில் உள்ள ஒன்றுக்குச் சென்று சீக்கிரம் காரியத்தை முடித்துவிட முற்பட்டேன். அது ஒற்றை குத்துப்பாறை. நாலுபக்கமும் கடல் பொங்கும்போது பேரலைகள் மோதி மடியும். சுற்று மண் வெறும் கட்டான் தரை. கால் நடைகளுக்கு வரட்டுப்புல்லும், வசிக்கும் குடியானவர்களுக்கு மட்டரகத் தான்யம் சாகுபடி செய்துகொள்ள சொற்ப வசதியும் உண்டு. காய் கறியோ ரொட்டியோ, நாட்டுக்கு வந்துதான் வாங்கிப் போக வேண்டும்.

நான் அங்கு சென்றபோது மூன்றே மூன்று பொள்ளல் குடிசைகள் தான் இருந்தன. அவற்றில் ஒன்று காலி. அதை அமர்த்திக் கொண்டேன். அதில் இரண்டே அறைகள் தான் உண்டு. சாதாரண காலத்தில் நான் அதற்குள் கால் வைக்கவே கூசுவேன். அவ்வளவு மோசம்.

அதை மராமத்து செய்யச் சொல்லி அதற்குள் புகுந்தேன். எனது வருகை அங்குள்ளவர்களைப் பிரமிக்க வைத்தது என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் அங்கு வந்து என்னைத் தொந்தரவு படுத்துவோர் ஒருவரும் இல்லை.

இந்தக் குடிசையிலிருந்து கொண்டு காலை வேளையில் என் வேலையில் ஈடுபடுவேன். மாலைப்போதில் மழை பனி இல்லாவிட்டால் வெளியில் சென்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பேன் கணந்தோறும்மாறும், ஆனால் ஓயாமல் ஒழியாமல் ஒரே மாதிரி போக்கைத் தரும் காட்சி. சுற்றிலும் பார்த்த இடமெல்லாம் தழையில்லா வனாந்திரம்.

வேலை வளர வளர அது எனக்கு வேதனை தரும் ஒன்ருக இருந்தது பல நாட்கள் என் நரகத் தொழிற்கூடத்திற்குள் செல்லவே மனம் ஒப்பாது. முதலில் நான் சிருஷ்டி லயிப்பில் கொண்ட ஆவேசமும் வெறியும் இப்பொழுது இல்லை. உழைப்பின் கோரமே எனக்குத் தெரிந்தது எப்படியாவது சீக்கிரம் முடித்து விட்டுப்போய்விடுவோம் என்று முனைந்தேன். வேலையில் ஈடுபட்டிருக்கும் போதே கை தொய்ந்துவிடும். மனம் வெறுத்துவிடும்.

வேண்டா வெருப்போடு செய்த வேலையும் தனிமையும் மீண்டும் எனக்கு நரம்பதிர்ச்சியை ஏற்படுத்தியது. பல மணி நேரம் குரங்கைப் பறிகொடுத்த ஆண்டிபோல உட்கார்ந்திருப்பேன்.

வேலையும் பெயரளவுக்குச் செய்தாகிவிட்டது; சீக்கிரம் முடிந்துவிடும் என்ற நினைப்பில் முயன்று வந்தேன். ஆனால் உள்ளுக்குள் எங்கோ ஒரு மனக்குறளி இதெல்லாம் நல்லதுக்கல்ல என்று கெவுளி யடித்துக் கொண்டிருந்தது.

ஒரு நாள் மாலை சூரியன் அஸ்தமனமாகி விட்டது. நான் சிருஷ்டிக் கூடத்தில் உட்கார்ந்திருந்தேன். சந்திரன் கடலிலிருந்து எழுந்து கொண்டிருந்தான். வேலைக்குப் போதுமான வெளிச்சமில்லை. ‘சும்மா நோண்டிக்கொண்டு’ உட்கார்ந்திருந்திருந்தேன். தொடர்ந்து வேலை செய்வதா அல்லது நாளைக்கு வந்து கவனித்துக் கொள்வதா என்று யோசித்துக் கொண்டிருந்தேன். நான் செய்யும் வேலையின் பலன் என்ன என்பதையே எனது யோசனை நாடியது. நான் முன்பு படைத்த ஜீவன் என் இதயத்தைச் சுடுகாடாக்கியது. இனிச் செய்யும் ‘பிறவியின் குணம் எப்படி இருக்கும் என்று யாருக்குத் தெரியும் அவனுக்கு வாக்குக் கொடுத்ததெல்லாம் சரிதான். நான் உற்பத்தி செய்துவிடும் பெண் ஜீவன் இதைவிடப் பன்மடங்கு குரூரமாகிக் கொலை வெறியில் குளித்தால் – தன் பிறப்புக்கு முன்னால் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தத்துக்கு இணங்க மறுத்துவிட்டால்? ஏன் இரண்டும் ஒன்றை யொன்று வெறுத்

துப் பகைமை பாராட்டப் புகுந்துவிட்டால், ஆண் ஜீவனுக்குத் தன் சொரூபத்தைப் பற்றி முந்தி இருந்ததைவிடப் பன்மடங்கு அதிகமாக வெறுப்புத் தட்டாது என்று என்ன நிச்சயம்? அவள் அவனை வெறுத்து மனிதராசியில் ஆணழகை நாட ஆரம்பித்து விட்டால்? அவன் மீண்டும் அகதியாகி தன் இனத்தாலேயே வெறுக்கப்படும் நிலைமை ஏற்பட்டால்?

இருக்கட்டும். இவர்கள் தங்கள் பிரதிக்ஞை வழுவாமல் நடந்து வனாந்திரத்தில் குடியேறிவிட்டாலும் வேட்கை மிகுந்த இந்த அயோனிஜ உயிர் பிண்டம் தன் வம்ச விருத்தி செய்யாதா? இந்த ஒன்றையே தாங்க முடியவில்லையே, இதன் வம்ச விருத்தியால் மலியும் பேய்க் கணங்களின் கொடுமையில் மனித ஜாதி—சிக்காமல் தப்புமா? இப்படி முடிவில்லாக் கேள்விகள் என் மனசில் சரக்கூடம் போட்டன. நான் என் சிருஷ்டியின் துக்க மயத்தில் சிக்கித்தான் மனமிளகி இணங்கி விட்டேன். தன் சுயநலத்தால் உலகத்தைப் பாழாக்கிய புல்லுருவி என்று மனித வம்சம் வாழையடி வாழையாக என்னை வைது வராதா?

இதை நினைக்க நினைக்க என் நாடித் துடிப்பே நின்று விடும் போலிருந்தது. நான் ஏறிட்டு ஜன்னல் வழியாக நோக்கினேன். மங்கிய நில வொளியிலே உதட்டில் கோரச் சிரிப்பு நெளிய அந்தப் பைசாச ஜந்து என்னைப் பார்த்துக் கொண்டிருந்தது.

நான் என் வாக்கை நிறைவேற்றுகிறேனா என்பதைப் பார்க்க அது என்னைத் தொடர்ந்திருக்க வேண்டும். நான் அவனையே பார்த்தேன். முகத்திலே குரோதமும் துரோகமும் தெறித்தது. இதனிடம் கொடுத்த வாக்குப்படி நடந்து கொள்வது பைத்தியக்காரத்தனம் என்று தீர்மானித்து அதுவரை இயற்றிய காரியத்தை அழித்து விட்டேன். கோபத்தின் ஆவேசம் தாங்காமல் என் உடம்பு நடுங்கியது.

உள்ளத்தில் குமுறிய சோகத்தை எல்லாம் கொட்டி ஒரு பெரும் ஊளையிட்டுக் கொண்டு அகன்ருன் அந்தப் பிரேத மனிதன்.

இனிமேல் என்னவாகுலும் சரி இந்த வேலேயில் ஈடுபடுவ தில்லை என்ற உறுதியுடன் ஜீவசிருஷ்டிக் கூடத்தை இழுத்துப் பூட்டிக்கொண்டு வெளிவந்தேன்.

பல மணிநேரம் நிம்மதியற்ற மனத்துடன் கடலைப் பார்த்துக் கொண்டே நின்றேன். பின்னல் காலடிச் சத்தம் கேட்டது அவன்தான் பிரேத மனிதன். கதவைச் சாத்திக் கொண்டு என்னை நெருங்கினுன்.

''நீ ஆரம்பித்த வேலையை அழித்துவிட்டாய் உன் நினைப் பென்ன? வாக்குறுதியைமீற அவ்வளவு தைரியமா? நான் உன்னை நிழல்போலத் தொடர்ந்து வந்தேன். தாங்கமுடியாத அயர்வையும் பசியையும் தாங்கினேன். என் நம்பிக்கையை அழிக்க உனக்கு அவ்வளவு தைரியமா?'' என்ருன்.

''தொலைந்து போ'' என்ன ஆனுலும் சரி நான் நிச்சயமாக வாக்குறுதியை நிறைவேற்ற மாட்டேன். உன்னைப்போல் இன்னும் ஒரு கோர சொரூபத்தை நான் உண்டாக்கவே மாட்டேன்'' என்று பதில் அளித்துவிட்டேன்.

மீண்டும் மீண்டும் வார்த்தையை வளர்க்க ஆரம்பித்தான். நான் கண்டிப்பாக மறுத்துவிட்டேன்.

என் உறுதியைக் கண்டு, ''சரிதான், நான் போகிறேன். உன்னுடைய கலியாணத்தன்று இரவு நான் உன் பக்கத்தில் இருப்பேன் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

''அடே பாவி! என் மரணச் சீட்டை நிச்சயப்படுத்திக் கொள்ளுமுன் உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பார்!'' என்றேன்.

ஆனல் அவன் ஓடிவிட்டான்.

MADURAI UNIVERSITY LIBR
138565

முதலில் சற்றுத் தயங்கி வேலையை மறுபடியும் ஆரம்பிக்க நினைத்தேன். ஆனால் மனம் ஒப்ப மறுத்துவிட்டது.

ஒரு கூடையில் என் முயற்சியின் சின்னங்களைக் கட்டிக் கொண்டு படகில் ஏறினேன். எதிர்க் கரை நான்கு மைல்கள் தான்.

சிறு மேகம் நிலவை மறைத்தது கூடையை தண்ணீரில் போட்டுவிட்டேன். படகடியில் படுத்தேன்.

திரும்பவும் விழித்துப் பார்க்தம் போது திசை தெரியாமல் நடுக்கடலில் மாட்டிக் கொண்டேன் என்பது தெரிந்தது

மனம் போனபடி தண்டு வலித்துச்சென்றேன். கரை தென் பட்டது. சோர்வும் என்னைத் தள்ளியது.

நான் மீண்டும் விழித்துப் பார்க்கும்போது கரையில் சிலர் என்னுடன் வெறுப்போடு பேசினார்கள். நான் வந்து சேர்ந் தது அயர்லாந்து என்று அறிந்தேன்.

"கார்னிடம் வா!" என்று என்னை அழைத்துச் சென்றார்கள்

"என்னை கார்வினிடம் அழைத்துச் சென்றார்கள். அவர் மாஜிஸ்ட்ரேட். சாட்சிகள் பலரை விசாரித்தார். சுமார் ஆறு பேர்முன் வந்தார்கள்.

கரையோரமாக ஒதுங்கிக் கிடந்த பிரேதத்தைப் பார்த்த விவரமும், கழுத்தில் கைவிரல் அடையாளம் கொலைக்குறி காட்டியதும் சொன்னார்கள்.

நான் பிரேதத்தைப் பார்க்க விரும்பினேன். அனுமதி தந்தார்கள். கிடங்குக்குள் சென்றேன். அங்கே எதைக் கண் டேன்; கிடத்தியிருந்தது கிளர்வெலின் சடலம். உடனே பளிச்சென்று புரிந்து விட்டது. பிரேத ஜீவனின் கோரவிரல் களே இதை நடத்தி இருக்க வேண்டும். விழுந்து அலறி னேன். என் நண்பனுக்கும் நானே எமனானேன். அவ் வளவுதான் எனக்கு ஜன்னி கண்டு இரண்டு மாதம் படுக்கை யில் விழுந்துவிட்டேன்

புத்தி தெளியும் தருணத்தில் என் தகப்பனர் வந்தார். என்னை விதி வேட்டை யாடுவதைக் கண்டு அவரது மனம் நொந்துவிட்டது. கார்வின் உண்மையிலேயே நல்லவர். அவரது முயற்சியே இதற்குக்காரணம். சமூத்தில் விழ இருக்கும் சுருக்குக்குத் தப்பினேன். ஆனல் உண்மையில் கொலைஞன் நான்தானே!

ஆறுதல் சொல்லி என்னைத் தேற்றினர் தகப்பனர். திரும்ப அழைத்துச் சென்ருர். என் போக்குக்கெல்லாம் விட்டு முடிவில் என்னை ஜெனிவாவுக்கு அழைத்து வந்து விட்டார்.

# கலியாண தினத்தன்று இரவு

நான் அடிக்கடி பழிகாரன் நானே என்று என்னைத் தூற்றிக்கொள்வதின் காரணம் தகப்பனுருக்குப் புரியவில்லை. துன்பச் சுமை என்னை இப்படிப் பிதற்ற வைத்து விட்டது என்று நினைத்தார். எனக்கு மனித சகவாசத்திலேயே பிடிப்பற்றுப் போய்விட்டது.

எங்கள் மணவினைநாளும் நெருங்கியது கோழைத்தனத் தாலோ முன்செய்து கொடுத்த பிரதிக்ஞையாலோ உள்ளுக் குள் எனக்கு ஏற்பட்ட சங்கடம் சொல்லி முடியாது. மேலுக்கு உல்லாசமாக இருப்பதாக வேஷம் போட்டேன்.

என்னை என் சிருஷ்டி தாக்கி விடாமல் இருக்க சகல ஏற்பா டுகளையும் செய்து கொண்டேன். கலியாண நாள் நெருங்க நெருங்க என்ன தடை வந்தாலும் இதை நடத்தியே ஆகவேண் டும் என்று பேசிக்கொண்டார்கள்.

எலிஸபெத்தும் உற்சாகமாகவே இருந்தாள் கலியாணமும் விமரிசையாக நடந்தேறியது.

மணவினை முடிந்ததும் நாங்கள் கடல் மார்க்கமாக **எவியன்** என்ற இடத்திற்குச் சென்று அங்கு இரவைக் கழித்து விட்டு மறுநாள் காற்று சௌகரியமாக இருந்தால் எங்கள் மண விழா யாத்திரையை நடத்துவது என்று ஏற்பாடு செய்திருந் தோம்.

எலிஸபெத்தும் உற்சாகமாக என்னைக் கைபிடித்துக் கப்பலில் ஏறினுள். என் மனமோ துயரில் தத்தளித்தது.

இரவு எட்டு மணிக்கு எவியனில் இறங்கினோம். அருகில் இருந்த சத்திரத்தில் தங்கினோம்.

என் மன நிலையைக் கண்ட எலிஸபெத் விக்டர் ஏன் சங்கடப்படுகிறாய்?'' என்றாள்.

"ஒன்றுமில்லை, இரவுதான் ரொம்ப பயங்கரமாக இருக்கிறது!'' என்று சொல்லிவிட்டு க்ஷேமத்தை நாட சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன். எலிஸபெத்தை அறையில் போய்ப் படுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு வெளியே வந்தேன். திடீரென்று ஒரு கூக்குரல் இருளைக் கிழித்து என் உள்ளத்தையும் கிழித்தது. திகைப்பூண்டு மிதித்தவனைப்போல் நின்றேன்.

அவள் அறைக்கு ஓடினேன். அவன் வேலை செய்தான். கண நேரத்திற்கு முன் ஜீவகளையுடன் இருந்த எலிஸபெத் பிணமாகி விட்டாள்.

அவள்மீது விழுந்து கதறினேன். ஜன்னல் திறந்தது. அந்தப் பைசாசம் என்னைப் பார்த்துச் சிரித்தது. பிணத்தைச் சுட்டிக்காட்டி எக்களித்தது. நான் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓடிச் சுட்டேன். ஆனால் சிட்டாகப் பறந்து விட்டான்.

துப்பாக்கிச் சத்தம் ஜனத் திரளைக் கூட்டியது. அவர்களும் தொடர்ந்து ஓடினார்கள். என்ன பயன்? அவன தப்பி விட்டான்.

ஈமக்கிரியைகளும் முடிந்தது. ஜெனிவாவுக்குத் திரும்பினேன். தள்ளாத வயது வரை பொள்ளலுற்ற என் தந்தையின் சடலமும் விழுந்துவிட்டது. மனிதன் எத்தனையைத்தான் தாங்கமுடியும்.

நான் அந்த அமானுஷ்ய கோரத்தை என், கையாலேயே அழித்து தீர்த்து விடுவது என்று பிரதிக்ஞை எடுத்தேன்.

அவன்போன இடங்களெல்லாம் சுடுகாடுதானே! தொடர்வது லகுவாக இருந்தது, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, கடைசியாக நிசாசரவனுந்தரம் வரை வந்து விட்டேன்.

என் உடலும் விழுந்துவிடும்போல் இருக்கிறது. அவன் கொன்று குவித்தோர் பெயரைச் சொல்லி அவனை அழித்து விடுங்கள். அதுவே எனக்குச் செய்யும் உபகாரம்!" என்று கூறி முடித்தான்.

(வால்டன் தனது சகோதரிக்கு எழுதிய மற்ற கடிதங்களின் சாரம்)

நான் அவனுக்கு அப்படியே வாக்குக் கொடுத்தேன். ஆனால் மாலுமிகள் உடனே ஊருக்குத் திரும்பிவிட வேண்டும் என்று கலகம் பண்ண ஆரம்பித்தார்கள். இதை அறிந்த அன்னியன் தானாக முயல முற்பட்டான். நோயும் மன நோக்காடும் வேகவைத்த கூடு விழுந்து விட்டது. தீரமான அந்த அன்னியன், இரண்டாவது பிரம்மா அகன்று விட்டான்.

ம ாள் அந்தப் பிரேத மனிதன் எப்படியோ இதை அறிந்து ந்து விட்டான். இறந்தவன் மீது விழுந்து விழுந்து அழுதான். நான் அவனை வைதேன்.

"நீ பிராங்கன்ஸ்டீனுடைய நேசன் என்கிறாய். அவ அவசரமாகச் சொன்ன கதையில் என் மன உளைச்சலை சொல்ல நேரம் இருந்திருக்காது. நான் அன்பையும் நேசத்தையும் விரும்பினேன். அது கிடைக்கவில்லை. நான்தான் பாவி! என்னை ஏன் படைத்தார்?

"நான் இனிமேல் இருக்கப் போவதில்லை. உத்தர துருவத்திலே நெருப்பேற்றி தீக்குளித்து அதன் தழுவலிலே என்னை இல்லாமல் ஆக்கிக் கொள்ளுவேன். இதுவே எனக்குச் சுகம். போய் வருகிறேன்!" அவன் போய் விட்டான் பிரேத மனிதன் சோகம் சொல்லில் அடங்காது.

முற்றும்

138565
3295:11
3147:5
...DURAI UNIVERSITY LIBRA...